
Koviloor Digital Library

அழகர் கிள்ளை வீடு தூது

உரைவிளக்கம்

முனைவர் பழ. முத்தப்பன்



Acc. No. 45843

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

பலபட்டடைச் சொக்கநாதப்பிள்ளை

அழகர் கிள்ளைவிடு தூது

மூலமும் விளக்க உரையும்

உரை விளக்கம் :

முனைவர், சித்தாந்தச் செம்மணி

பழ. முத்தப்பன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No 45843

உமா பதிப்பகம்

உமா பதிப்பகம்

18/171, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 2521 5363

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	அழகர் கிள்ளை விடு தூது
ஆசிரியர்	:	பலபட்டடைச் சொக்கநாதப்பிள்ளை
உரையாசிரியர்	:	முனைவர் பழ. முத்தப்பன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - டிசம்பர் 2011
பதிப்புரிமை	:	© உமா பதிப்பகம்
தாள்	:	11.2 வெள்ளைத் தாள்
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	80
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	ரூ. 25.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

Koviloor Digital Library

91/4



நூலாசிரியரும், நூல் அமைப்பும்

அழகர் கிள்ளைவிடு தூதின் ஆசிரியர் பலபட்டடை சொக்கநாதப் பிள்ளை என்பவர் ஆவார். இவருடைய ஊர் மதுரை என்பர். பலபட்டடை என்பது கணக்கு எழுதும் மரபினருக்கு அளிக்கும் பட்டப்பெயர் ஆகும். எனவே, இவருடைய முன்னோர்கள் அப்பணியைச் செய்த காரணத்தால் மரபு வழி வந்த பெயராக இதனை வரலாற்றா சிரியர்கள் குறிப்பிடுவார்கள். இவரு டைய பெற்றோர் மதுரை இறைவர் சொக்கநாதரை வழிபடும் சிறப்பினை உடையவர்கள் என்பதால் இவருக்குச் சொக்கநாதர் என்ற பெயரை வைத்திருக் கின்றனர். இவர் இளமையிலேயே கவிபாடும் திறம் பெற்றிருக்கிறார். இவர் காலத்தில் வாழ்ந்த சுப்ர தீபக் கவிராயருக்கும் இவருக்கும் புலமைப் போர் நடந்திருக்கிறது.

Koviloor Digital Library

தனிப்பாடல் திரட்டில் இவருடைய பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்கள் வசைப் பாடல்கள் போலத் தோன்றினாலும் இசை விளைவிக்கும் செய்யுள் களாகத் தெரிகின்றன. இவருடைய நண்பர் சிவந்தான் எல்லைப் பல்லவன் என்ற வள்ளல் ஆவார். இவர் சைவ மதப் பற்றுடையவராக இருப்பினும் வைணவக் கடவுளான திருமாலைப் போற்றுகின்ற இந்நூலைப் பாடியிருப்பது அவர்தம் சமயப் பொறையைக் காட்டுகின்றது. இவர் பாடிய தனிப்பாடல்கள் தவிர இவர் இயற்றியதாக மதுரை மும்மணிக்கோவை, எமக அந்தாதி, இராமேசுவரத் திருத்தலத் தேவை உலா, திண்டுக்கல் பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது, கன்னிவாடி நரசிங்க நாயர் மேல் பாடிய வளமடல் ஆகிய நூல்கள் கிடைக்கப் பெறுகின்றன. இவருடைய வரலாறு முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இவரின் தனிப்பாடல்கள் மூலம் கிடைக்கப் பெற்ற நிகழ்வுகளே இவரின் வரலாறாக இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப் பெற்றுள்ளன. இவருடைய காலம் பதினேழாம் நூற்றாண்டு என்பர்.

நூலமைப்பு

இன்றைக்கு அழகர்மலை என்று வழங்கப் பெறு கின்ற திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளி யுள்ள அழகராம் திருமால் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி கிளியைத் தூது விடுத்ததைக் குறிப்பிடும் நூல் இதுவாகும். சிற்றிலக்கியங்களில் ஒன்றான தூது இலக்கிய வகையைச் சார்ந்தது இந்நூல் ஆகும்.

Koviloor Digital Library

91/4

முனைவர் ந.வீ. செயராமன் அவர்கள் வெளியட்டுள்ள சிற்றிலக்கிய அகராதியில் அறுபதுக்கும் மேற்பட்ட தூது இலக்கியங்கள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

இலக்கண விளக்கம் என்ற நூலில் தூது இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, உயர்திணைப் பொருள் ஒன்றையோ அல்லது அஃறிணைப் பொருள் ஒன்றையோ தான் விரும்பும் ஒருவரிடம் தூது விடுத்துப் பாடப்படுவது என்றும், காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலை அறிவித்து தலைவனுடைய மாலையைப் பெற்று வா என்று தூதுப் பொருளை அனுப்பு என்றும், இவ்விலக்கியம் கலிவெண்பாவில் பாடப்பட வேண்டும் என்றும் இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது.

தூது விடுக்கும் பொருள்களாக அன்னம், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சம், வண்டு, தென்றல் ஆகியவை அமையலாம் என்றும் இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது.

ஆனால், இந்த வரையறை மாற்றம் பெற்று அவ்வக் காலங்களில் தாமரை, நெல், தமிழ், யானை, அன்பு, பணம், கழுதை, காக்கை, குருவி, செருப்பு, மான், துகில், புகையிலை, புலவர் ஆகிய பொருள்களும் தூதுக்கு உரிய பொருள்களாக அமைந்துத் தூது இலக்கி யங்கள் தோன்றியுள்ளன.

தூது இலக்கியங்களில் இன்றைக்கும் சிறப்பு பெற்று விளங்குவன தமிழ் விடுதூது, அழகர் கிள்ளை விடு தூது, கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது, சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடு தூது ஆகியவை ஆகும்.

Koviloor Digital Library

அழகர் கிள்ளைவிடு தூதின் பாட்டுடைத் தலைவர் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள அழகர் ஆவார். இத்திருமாலிருஞ்சோலை என்பது மதுரைக்கு அண்மையிலுள்ள வைணவத் திருத்தலம் ஆகும்.

இங்கு எழுந்தருளியுள்ள திருமாலுக்கு அழகர் என்ற திருநாமம் கள்ளழகர் என்று இக்காலத்தில் வழங்கப் பெறுகிறது. இங்கு எழுந்தருளியிருக்கும் தேவியின் பெயர் சௌந்தர வல்லி என்பதாகும். இத்திருத்தலத்தில் நடைபெறும் விழாக்களில் மிகச் சிறப்புடையது கோடை விழாவாகிய சித்திரை விழாவாகும்.

இந்நூல் இருநூற்றி முப்பத்தொன்பது கண்ணி களைக் கொண்டு விளங்குகிறது. கண்ணி என்பது குறள் வெண்பா அமைப்பில் இரண்டு அடிகளைக் கொண்டது ஆகும். நூலின் தொடக்கத்தில் நம்மாழ்வார் மீது பாடப் பெற்ற காப்புச் செய்யுள் ஒன்று அமைந்துள்ளது.

கள்ளழகர் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி முதல் அறுபத்தாறு கண்ணிகளில் கிளியின் பெருமை களை எல்லாம் கூறி கிளியைப் பெருமைப்படுத்து கிறாள். இப்பகுதியில் கிளிக்கு உரிய பெயர்கள் எல்லாம் அமைந்து சிலேடையில் பொருள் அமையும் வண்ணம் பாடல் பகுதிகள் அமைந்துள்ளன.

கிளியின் பெருமையைக் கூறிய தலைவி அடுத்துத் திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியுள்ள அழகரின் பெருமை களை நூற்றிநாற்பத்து மூன்று கண்ணிகள் வரை குறிப்பிடுகின்றாள். இப்பகுதியில் திருமாலின் பத்து அவதாரங்களின் சிறப்புக்களும், அவரின் அருள்பெற்ற

Koviloor Digital Library

அடியார்களின் சிறப்பும், அழகருக்கு உரிய பத்து உறுப் புக்களும் கூறப் பெற்றுள்ளன.

அதன்பின் தலைவி அழகரின் விழாக்களில் ஒன்றான கோடைத் திருவிழாவாம் சித்திரைத் திரு விழாவை நூற்று நாற்பத்து நான்காம் கண்ணி முதல் நூற்று எண்பத்து ஆறாம் கண்ணி வரைக் குறிப்பிடுகின்றாள்.

இப்பகுதியில் அழகர் திருமாலிருஞ் சோலையில் இருந்துப் புறப்பட்டு தள்ளாகுளம், வைகைக் கரை, வண்டியூர் மண்டபம் ஆகிய இடங்களில் தங்கிப் பலச் சிறப்புக்களைப் பெற்று அடியார்களுக்கு அருள் வழங்கி சோலைமலை திரும்புவது வரை கூறப் பெற்றுள்ளது.


பிறகு தலைவி தன்னுடைய காதல் நிலையைக் கிளியிடம் எடுத்துரைப்பது நூற்று எண்பத்தேழாம் கண்ணி முதல் நூற்றத் தொண்ணூற்று எட்டாம் கண்ணி வரை அமைந்துள்ளது. இப்பகுதியில் உலா வந்த அழகரிடம் தான் காதல் கொண்ட செய்தியைத் தலைவி கூறுகிறாள்.

பிறகு பிற பொருள்கள் தூதுக்கு ஆகாது என்பதைக் கூறி கிளியே தூதுக்குரிய தகுதி படைத்தது என்பதை நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதாம் கண்ணி முதல் இருநூற்று ஒன்பதாம் கண்ணி வரைக் குறிப்பிடுகிறாள். பின் திருமால் இருக்கும் இடத்தின் அமைப்பைக் குறிப் பிட்டுக் கிளி எவ்வாறு தூது சொல்ல வேண்டும் என்ப தையும் குறிப்பிட்டு நிறைவாக அழகரின் திருத்தோள் மாலையை வாங்கி வா என்று தலைவி நூலை நிறைவு செய்கிறாள்.

Koviloor Digital Library

இந்நூலில் ஆசிரியரின் கவிப்புலமையும், வைணவ சமய அறிவும் மிகச் சிறப்பாகப் புலப்படுகின்றன. சிலேடையில் பொருள் கொள்ளுமாறு செய்திகளை அமைத்திருப்பது நூலாசிரியரின் நுண்மான் புலமையை வெளிப்படுத்துகின்றது. சிறந்த தூது நூல்களில் இந் நூலும் விளங்கித் தமிழ் மக்களால்ஏற்றிப் போற்றப் பெறுகின்றது.

Koviloor Digital Library



தூது என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது நாராய்! நாராய் செங்கால் நாராய்! என்ற சத்திமுற்றப் புலவர் பாடலே!

அரசன் ஒருவன் மற்றோர் அரசனுக்கு ஒருவர் வாயிலாகத் தூது சொல்லியனுப்புவது பழங்காலம் முதல் இருந்து வந்த பழக்கம் ஆகும்.

அதியமான் என்ற அரசன் தொண்டைமான் என்ப வனுக்கு ஔவையார் என்ற புலவரைத் தூது அனுப்பிய செய்தி புறநானூற்றுப் பாட்டால் தெரிய வருகிறது.

பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இயற்றிய அழகர் கிள்ளைவிடு தூது, தூது என்னும் வகையான நூல்களுள் சிறப்பிடம் பெற்றுள்ளது.

கிளியை கடவுளிடம் தூது அனுப்பும் காதலி, அந்தக் கிளிக்கு உள்ள தகுதிகளை எடுத்துச் சொல்லும் முறையும், மற்ற வருணனைகளும் மிக நயமாக அமைந்துள்ளன. அதன் நடை இனிமை வாய்ந்தது.

Koviloor Digital Library

இப்படி உயர்ந்த ஒரு நூலுக்கு குறிப்புரை, பதவுரை என சில வெளியீடுகள் வந்திருந்தாலும் முழுமையான நூல் கருத்தை விளக்கும் உரை நூல் ஒன்று வராதிருந்த குறையை இந்தப் பதிப்பு நிறைவு செய்கிறது.

சித்தாந்த செம்மணி, முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் அழகர் கிள்ளை விடு தூது நூல் முழுமைக்கும் அருமையான விளக்க உரையை எளிய நடையில் தந்துள்ளார்கள். அவர்களின் அரிய முயற்சிக்கு எங்கள் பாராட்டுகள்.

உமா பதிப்பக வெளியீடான 'அழகர் கிள்ளை விடு தூது' தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தூது போய் வெற்றி வலம் வர வேண்டுமென்று விரும்பி இதை உங்கள் முன் படைக்கிறோம்.

சென்னை - 1 **இராம லட்சுமணன்**
28.12.2011

Koviloor Digital Library

அழகர் கிள்ளைவிடு தூது

காப்புச் செய்யுள்

நூலாசிரியர் தான் எழுதும் நூல் சிறப்புடன் முடிவதற்குக் கடவுளை வணங்குதல்.' காப்புச் செய்யுள் இரண்டு வகைப்படும். வழிபடு கடவுளை வணங்குதல், நூலுக்கு உரிய ஏற்புடைக் கடவுளை வணங்குதல். இச்செய்யுள் நூலாசிரியர் வழிபடும் வைணவப் பெரியார் நம்மாழ்வார் மீது பாடப்பெற்ற செய்யுள் ஆகும்.

தெள்ளுதமிழ் அழகர் சீபதி வாழ்வார் மீது
கிள்ளைவிடு தூது கிளத்தவே - பிள்ளைக்
குருகுஊரத் தானேசங்கு ஊர்முகில் ஏறும்
குருகூர் அத்தான் நேசம் கூர்.

பொருள்:

தெளிவுடைய மொழியாம் தமிழ் மொழியை விரும்புகின்ற அழகர் ஆகிய சீபதி என்னும் வடமொழிப் பெயர் கொண்ட, திருமாலிருஞ்சோலை என்ற ஊரில் வாழ்கின்ற திருமால் மீது கிள்ளைவிடு தூது பாடுவதற்கு - நாரைக் குஞ்சுகள் நீரில் ஊர்ந்து வருவதைக் கண்ட சங்குகள் அஞ்சித் தாங்களே சென்று பாக்கு மரங்களில் ஏறிக் கொள்ளுகின்ற வளமையுடைய குருகூர் என்னும்

Koviloor Digital Library

ஆழ்வார் திருநகரியில் தோன்றி அருளிய தலைவனே, (நம்மாழ்வாரே) அன்பு மிகுந்து அருள்புரிவாயாக.

சொற்பொருள் விளக்கம்:

கிளத்தவே - பாடுவதற்கு, பிள்ளைக் குருகு - நாரைக் குஞ்சுகள், கமுகு - பாக்குமரம், குருகூர் - ஆழ்வார் திருநகரி, அத்தான் - தலைவன், நேசம் - அன்பு.

நூல்
கிள்ளையின் பெருமைகள்

தூது செல்லுகின்ற கிள்ளை(கிளி)யின் பெருமைகள் முதல் 66 கண்ணிகள் வரை கூறப் பெற்றுள்ளன.

கார்கொண்ட மேனிக்கடவுள் பெயர்கொண்டு
நீர்கொண்ட பாயல் நிறம்கொண்டு - சீர்கொண்ட
வையம் படைக்கும் மதனையும் மேல்கொண்டு இன்பம்
செய்யும் கிளியரசே செப்பக்கேள் - வையம்எலாம்
வேளாண்மை என்னும் விளைவுக்கு நின்வார்த்தை
கேளாதவர் ஆர்காண் கிள்ளையே - நாளும்
மலைத்திடும் மாரன் ஒற்றைவண்டிலும் இல்லாமல்
செலுத்திய கால்தேரை முழுத்தேராய்ப் - பெலத்துஇழுத்துக்
கொண்டுதிரி பச்சைக்குதிரையாய் உனக்கு எதிரோ
பண்டுதிரி மெய்யோன் பரியேழும் - கண்ட
செகமுழுதும் நீ ஞானதீபமும் நீஎன்று
சுகமுனியே சொல்லாரோ சொல்லாய் - வகைவகையாய்
எவ்வண்ணமாய் பறக்கும் எப்பறவை ஆயினும்உன்
ஐவண்ணத்துள்ளே அடங்குமே - மெய்வண்ணம்
பார்க்கும் பொழுதில் உனைப்பார்ப்பது என்பார் என்றோ

Koviloor Digital Library

மூக்குச் சிவந்தாய் மொழிந்திடாய் - நாக்குத்
தடுமாறுவோரை எல்லாம் தள்ளுவரே உன்னை
விடுவார் ஒருவர் உண்டோ விள்ளாய் (9)

பொருள்:

கருப்பு நிற மேனியை உடைய திருமாலின் பெயராம் அரி என்ற பெயரைக் கொண்டும், திருமால் கடலில் விரித்துப் படுத்திருக்கும் பாயாகிய ஆலிலை யின் பச்சை நிறத்தைத் தன் நிறமாகக் கொண்டும், சிறப்பு கொண்ட ஐந்து மலர் அம்புகளைக் காதல் கொண்ட வர்கள்மீது விடுகின்ற மன்மதனைச் சுமந்து சென்று காதலர்க்கு இன்பம் கொடுக்கின்ற கிளியரசே, நான் கூறுவதைக் கேட்பாயாக.

வேளாகிய மன்மதனின் ஆட்சியால் காம இன்பம் தோன்றும். அப்பொழுது அவனைச் சுமந்து செல்லும் உன்னுடைய பேச்சைக் கேட்டு இன்புறாதவர்கள் யார்? கூறுவாயாக. நாள்தோறும் காதல் போரினை ஏற்படுத்தும் மன்மதனின் ஒரு சக்கரம் கூட இல்லாத அவனின் காற்றாகிய தேரை முழுத்தேர் போல வலிமையாக இழுத்துக் கொண்டு திரிகின்ற பச்சைநிறக் குதிரையே, சூரியனின் ஒரு சக்கரம் கொண்ட தேரினை இழுக்கின்ற ஏழு குதிரைகள் உனக்கு ஈடாகுமா? உலகம் முழுவதும் நீ விளங்குகிறாய். நீயே ஞானமாகிய விளக்கும் ஆவாய். இச்சிறப்பினைச் சுகமுனிவர் என்ற ஞானி கிளி வடிவு கொண்ட பெண்ணிடத்தில் தோன்றி உணர்த்தினாரோ? சொல்வாயாக.

Koviloor Digital Library

வகை வகையாய்ப் பலவகை நிறங்களில் பறந்து திரியும் எத்தகைய பறவைகள் ஆயினும் உன்னுடைய ஐந்து நிறங்களில் அப்பறவைகளின் நிறம் அடங்கி விடுமே. உன்னுடைய உடலின் பச்சை நிறத்தை மட்டும் பார்ப்பவர்கள் உன்னைச் சிவபெருமானின் தேவியாம் பார்வதி என்று கருதிவிடக் கூடும் என்று நினைத்தோ மூக்கைச் சிவப்பு நிறத்தில் நீ கொண்டாயோ கூறு வாயாக. வாய் தடுமாறிப் பேசுகின்றவர்களை எல்லாம் உலகத்தார் ஒதுக்கி விடுவார்கள். ஆனால், நீ வாய் குழறிப் பேசினாலும் உன்னை ஒதுக்கி விடுபவர் யாரேனும் உண்டோ? கூறுவாயாக.

சொ.பொ.வி:

நீர் - கடல், பாயல் - படுக்கையாகிய பாய், வையம் படைக்கும் - (ஐ அம்பு படைக்கும்) ஐந்து அம்புகளை விடுக்கும், மதன் - மன்மதன், வேள் - மன்மதன், மலைத்திடும் - போர்புரியும், கால்தேர் - காற்றாகிய மன்மதனின் தேர், பெலத்து - வலிமையாக, வெய்யோன் - சூரியன், பரி - குதிரை, ஐவண்ணம் - கிளியின் சிகப்பு, கருப்பு, பொன்நிறம், பச்சை, நீலம் ஆகிய ஐந்து நிறங்கள்.

புராண வரலாறு:

இப்பகுதியில் இடம் பெற்றது சுகமுனிவர் வரலாறு. சுக முனிவர் வியாச முனிவரின் மகன் ஆவார். வியாசர் முன் கிருதாசி என்ற அழகுடைய பெண் தோன்றி அவரைக் காம வயமாக்கித் தான் கிளி வடிவம் எடுத்து, அவரோடு இணைந்து ஒரு குழந்தையைப் பெற்றாள்.

Koviloor Digital Library

அவரே இந்தச் சுக முனிவர். சுகம் என்பது கிளியைக் குறிக்கும் சொல்லாகும். எனவே, கிளி வடிவு கொண்ட பெண்ணிடத்தில் தோன்றியவர் என்பதால் சுகமுனிவர் எனப்பட்டார். இவருக்கு ஞான உபதேசம் செய்தவர் நாரதர் ஆவார்.

(10-15 கண்ணிகள்)

- அடுபோர்
மறந்தரு சீவகனார் மங்கையரில் தத்தை
சிறந்ததுநின் பேர்படைத்த சீரே - பிறந்தவர்
ஆரும் பறவைகளுக்கு அச்சுதன் பேரும்சிவன்தன்
பேரும் பகர்ந்தால் பிழையன்றோ - நேர்பெறுவி
வேகி ஒருகூடுவிட்டு மறுகூடு அடையும்
யோகி உனக்குவமை உண்டோ காண் - நீகீரம்
ஆகையால் ஆடைஉனக்கு உண்டே பாடகமும்
நீகொள்வாய் காலாழி நீங்காயே - ஏகாத
கற்புடையாய் நீஎன்றால் காமனையும் சேர்வாயே
அற்புடைய வெண்கொடி நீஆகாயோ - பொற்புடையோர்
துன்னிய சாயுச்சியம் சுகரூபம் ஆகையால்
அன்னது நின்சொரூபம் அல்லவோ.

பொருள்:

பகைவர்களை அழிக்கும் போர்களில் தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்துகின்ற (சீவக சிந்தாமணி என்ற நூலின்) தலைவனாகிய சீவகனின் மனைவியருள் காந்தருவ தத்தை என்பவள் சிறப்புப் பெற்றதற்குக் காரணம் தத்தை என்ற உன்னுடைய பெயரைக் கொண்டதனாலே ஆகும். மானிடராய்ப் பிறந்த யாவரும் உன்னைத் தவிர மற்ற பறவைகளுக்கு ரங்கா ரங்கா என்ற

Koviloor Digital Library

அச்சுதன் பெயரையும், சொக்கா சொக்கா என்ற சிவன் பெயரையும் சொல்லிக் கொடுத்தால் அவைகள் சொல்லாது. எனவே, அது பிழையாகும் (நீ தானே சொன்னதைத் திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளை. உனக்குத் தானே அவர்கள் சொல்லித்தர வேண்டும்) யோகிகள் தங்களுடைய உடம்பை விட்டு மற்றொரு உடம்பாகிய கூட்டில் பாய்வார்கள். அவ்வாறு பாயும் பொழுது உயிர் மட்டும் பாய்வதால் பார்க்கின்றவர் கண்களுக்கு அவர்களைத் தெரியாது. ஆனால், நீயோ நீ வாழும் ஒரு கூட்டிலிருந்து மற்றொரு கூட்டிற்கு யாவரும் காணும் வண்ணம் உன் உடம்புடனே புகுவாய். ஆதலால் யாருக்கும் தெரியாமல் புகும் யோகி உனக்கு உவமையாவாரோ.

உனக்குக் கீரம் என்ற பெயருண்டு. கீரம் என்றால் ஆடை என்று பொருள். எனவே, உன்னை வளர்க்கின்ற வர்கள் உனக்கு ஆடை அணியாது காலில் பாடகம், கால்ஆழி என்ற காலணிகளை அணிவிக்க நீ அவற்றைப் பூண்டிருக்கின்றாய். நீ கற்புடையாய். அதாவது யாரும் ஏறிச் செல்ல முடியாத கல் பாறைகளில் நீ இருப்பாய். மேலும் நீ காமனையும் சேர்ந்திருப்பாய். ஆதலால் (பெண்களின் கால் அணியும், கற்பும், காமமும் உடைமையால்) நீ பெண்கொடி ஆவாயே.

உன்னுடைய வடிவம் சுகவடிவம் ஆகும். சுகவடிவம் என்பது உயர்ந்த தவம் கொண்டோர் தம் வாழ்வின் முடிவில் அடைகின்ற சாயுச்சியப் பதவி யாகும். அதனைச் சுகரூபம் என்பார்கள். ஆதலால் அச்சுகவடிவமே உன் வடிவம் அல்லவோ.

Koviloor Digital Library

சொ.பொ.வி:

அடுபோர் - பகைவர்களை அழிக்கும் போர், தத்தை - காந்தருவ தத்தை, அச்சுதன் - திருமால், விவேகி - யோகி, பாடகம், கால்ஆழி - பெண்கள் காலில் அணியும் அணிகலன்கள்.

(16-23 கண்ணிகள்)

- வன்னி

பரிசித்த எல்லாம் பரிசுத்தம் என்றோ
உருசித்த உனக்எச்சில் உண்பார் - துரிசற்றோர்
இன்சொல்லைக் கற்பார் எவர்சொல்லும் நீகற்பாய்
உன்சொல்லைக் கற்கவல்லார் உண்டோகாண் - நின்போலத்
தள்ளரிய யோகங்கள் சாதியாதே பச்சைப்
பிள்ளையாய் வாழும் பெரியோர் யார் - உள்உணர்ந்த
மாலினைப் போல மகிதலத்தோர் வாட்டமறப்
பாலனத்தாலே பசி தீர்ப்பாய் - மேலினத்தோர்
நட்டார் எனினும் நடந்துவரும் பூசைதனை
விட்டார் முகத்தில் விழித்திடாய் - வெட்டும்இரு
வாளனைய கண்ணார் வளர்க்க வளர்வாய் உறவில்
லாளனைநீ கண்டால் அகன்றிடுவாய் - கேளாய்
இருவடிவு கொண்டமையால் எங்கள் பெரிய
திருவடிகள் வீறெல்லாம் சேர்வாய் - குருவாய்ச்
செபதேசிகர்க்கு எல்லாம் தென்னரங்கர் நாமம்
உபதேசமாக உரைப்பாய்.

பொருள் :

வன்னி என்னும் நெருப்பில்பட்ட பொருள் எல்லாம் தூய்மையானது என்று மக்கள் கருதுவார்கள். உனக்கும் வன்னி என்ற பெயர் இருப்பதால் நீ உண்ட

Koviloor Digital Library

எச்சில் கனிகளையும் மக்கள் எச்சில் என்று ஒதுக்காது உண்கின்றார்கள். குற்றம் அற்ற பெரியோர்கள் இனிய சொற்களையே கற்று அதனைக் கையாள்வார்கள். ஆனால், நீயோ நல்லவர் தீயவர் எனப் பாராது எவர் எதைச் சொன்னாலும் நீ கற்றுக் கொள்வாய். உன்னைப் போல் பேச வல்லார் எவரேனும் உண்டோ.

நீக்க முடியாத யோகப் பயிற்சிகளைச் செய்யாமலே என்றும் பச்சைப் பிள்ளையாய் (நிறத்தாலும் இளமையாலும்) இருக்கும் உன்னைப் போன்ற பெரியோர் யார் இருக்கிறார்கள்? அறிஞர்கள் தங்களுடைய ஆன்மீக உணர்வால் அறிந்து கொள்ளும் திருமால் உலகோர் பசியைப் போக்குவதுபோல நீயும் பசித் துன்பத்தைப் பாலும் அன்னமாகிய சோறும் உண்டு தீர்த்துக் கொள்கின்றாய். மேலும் மேல் இனத்தைச் சார்ந்தவர்கள் உன்னுடன் நட்புக் கொண்டு பழகுகின்ற பொழுது தாங்கள் செய்து வரும் பூசை முறைகளை விட்டு விட்டால் அவர் முகத்தில் நீ விழித்திடாய் (நட்பு கொண்டவர்கள் உனக்கு எதிரியான பூசை - பூனையை ஏவி விட்டாலும் அவர்கள் முகத்தில் விழித்திடாய்)

வெட்டும் வாள் போன்று இரண்டு அழகான கண்களை உடைய பெண்கள் வளர்த்திட நீ வளர்கின்றாய். அவ்வாறு வளர்கின்ற பொழுது வில்லை உடைய வேடன் வந்தால் (பகைவர் வந்தால்) அவ்விடத்தை விட்டுப் பறந்து விடுவாய். மேலும் கேட்பாயாக. உன் மூக்கில் சிவப்பும் உடலில் பசுமையும் கொண்டு நீ விளங்குவதால் எங்களுக்குத் தெய்வமாக விளங்குகின்ற

Koviloor Digital Library

பெரிய திருவடியாகிய கருடனின் சிறப்புக்களை எல்லாம் நீயும் பெற்றிருக்கின்றாய். நீ குருவாக இருந்து நாள்தோறும் செபம் செய்கின்ற ஞான ஆசிரியர்களுக்கு எல்லாம் தென்னரங்கனின் திருநாமத்தை (ரங்கா) உபதேசித்துக் கொண்டிருக்கின்றாய்.

சொ.பொ.வி:

வன்னி - நெருப்பு, துரிசு - குற்றம், மகிதலம் - உலகம், பாலனம் - திருமால் பரிபாலித்தல், பால் அன்னம் - பாலும் சோறும், பூசை - வழிபாடு, பூனை, உறவில்லாளன் - வில்லை உடையவன், மற்றும் பகைவன், இருவடிவு - மூக்கில் சிவப்பு, உடலில் பச்சை நிறம் கொண்ட கிளி, (மனித உருவும் பறவை உருவும் கொண்ட கருடன்), திருவடிகள் - வைணவத்தில் கருடனுக்குப் பெயர், தேசிகர் - ஞானாசிரியர், அரங்கர்நாமம் - ரங்கா.

(24-33 கண்ணிகள்)

- இபமுலையார்

சித்தம் களிகூரச் செவ்விதழில் ஆடவர்போல்
முத்தம் கொடுக்க முகங்கோணாய் - நித்தமவர்
செவ்விதழ் உன்மூக்கால் சிவந்ததோ உன்மூக்கில்
அவ்விதழின் சிவப்பு உண்டானதோ - செவ்வியிழந்து
அண்டருக்குத் தோற்றா அடல்வேள் ஆனானைநீ
கொண்டு இழுத்தால் ஆகும்குறை உண்டோ - உண்டாக்கி
ஆயுவை நீட்ட அருந்தவத்தோர் பூரகம்செய்
வாயுவைஉன் பின்னே வரவழைப்பாய் - தேய்ஒளிர்
மைப்பிடிக்கும் வேற்கண் மலர்மாதும் சங்கரியும்
கைப்பிடிக்கநீ வங்கணம் பிடித்தாய் - மெய்ப்பிடிக்கும்
பச்சைநிறம் அச்சுதர்க்கும் பார்ப்பதிக்கும் உன்தனக்கும்

Koviloor Digital Library

இச்சைபெற வந்தவிதம் எந்தவிதம் - மெச்சும்
குருகே உன்நாக்குத்தான் கூழைநாக் கானது
அரி கீர்த்தனத்தினால் அன்றோ - தெரிவையர்கள்
ஆர்த்த விரல் உன்முகம் ஒப்பாகையாலே கையைப்
பார்த்து முகம் அதனைப் பார் என்பார் - சீர்த்தி
கிரியையிலே காணுங்கால் கிள்ளை அடையாத
பெரிய தனம் வீணன்றோ பேசாய் - தெரியுங்கால்
தேறுகனி காவேரி சிந்து கோதாவிரியும்
வீறுபெறுமே நீ விரும்பினால்

பொருள்:

யானைத் தந்தம் போன்ற அழகிய முலைகளை உடைய இளம் பெண்கள் சித்தம் (மனம்) மகிழ, அவர்களின் சிவந்த உதடுகளில் ஆண்களைப் போல முகம் சுழிக்காது முத்தம் இடுகின்றாய். நாள்தோறும் நீ முத்தம் இடுவதால்தான் உன்னடைய சிவந்த மூக்குப் பட்டு அப்பெண்களின் உதடுகள் செம்மை நிறம் ஆயிற்றோ. அல்லது அவர்களின் உதடுகள் பட்டு உன் மூக்கு சிவந்ததா? தன்னுடைய உருவ அழகை இழந்து விண்ணகத்துத் தேவர்களுக்குத் தோன்றாது இருப் பவனும், எல்லோரையும் தன் மலர் அம்புகளால் வெல்லுகின்ற வலிமை உடையவனுமாகிய மன்மதனை நீ குதிரையாக இருந்து இழுத்துக் கொண்டு திரிவதால் உனக்குக் குறையேதும் உண்டோ?

மேலும் காற்றை உணவாக உண்டு அக்காற்றைத் தவத்தால் அடக்குகின்ற பூரகம் என்னும் தவத்தை முனிவர்கள் செய்கின்றனர். அவர்கள் அடக்கும் காற்றை நீ உன் பின்னே வருமாறு செய்கின்றாய். மேலும் ஒளி

Koviloor Digital Library

வீசுகின்ற மை அணியப் பெற்ற வேல் போன்ற கண் களைக் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளும் சங்கரனின் தேவியாகிய உமையவளும் உன்னைக் கையிலே பிடித்துக் கொள்ளுகின்ற அளவிற்கு நீ அவர்களிடத்தில் நட்புக் கொண்டிருக்கின்றாய். உன்னுடைய உடலில் பொருந்தி உள்ள பச்சை நிறம் திருமாலுக்கும் பார்வதிக்கும் உனக்கும் எல்லோரும் விரும்பும் வண்ணம் வாய்த்த விதம் எத்தகையது? உலகோர் போற்றுகின்ற கிளியே, உன் நாக்கு சிறிதாகப் போனதற்குத் திருமாலின் கீர்த்தனங்களை இசைத்துப் பாடுவதுதான் காரணமா?

இளம் பெண்கள் காலையில் தூங்கி எழும் பொழுது கையைப் பார்த்தபின் முகத்தைப் பார்ப்பார்கள் என்று கூறுவது உன் மூக்குப் போலிருக்கும் விரல் நகங்களை முதலில் பார்க்க வேண்டும் என்ற கருத்தினால் தான்.ஆண்கள் செய்கின்ற புகழ்பெற்ற செயல்களை ஆராய்ந்தால் அவர்களின் நகம் கிள்ளுதலைப் பெறாத பெண்களின் பெரிய முலை வீணல்லவோ சொல்வாய். அதுபோல் ஆராய்ந்து பார்த்தால் நல்ல பழங்கள் நீ விரும்பிக் கொத்தாவிட்டால் காடுகளில் தேனை வீணாகச் சிந்தி சக்கையாககச் கீழே விழுந்து வீணாகி விடும். நீ விரும்பிக் கொத்தினால் அப்பழங்கள் கிளி கடித்த பழம் என்று பெருமையுடன் உலகோரால் உண்ணப்படும்.

சொ.பொ.வி:

இபம் - யானைத் தந்தம், செவ்வி - அழகு, அடல்வேல் - வலிமை உடைய மன்மதன், மைபிடிக்கும் - மையணிந்த,

Koviloor Digital Library

மலர்மாது - திருமகள், வங்கணம் - நட்பு, அச்சுதன் - திருமால், அரி - திருமால், ஆர்த்த விரல் - அழகிய விரல், கிரியை - செயல்கள், கிள்ளை - நகத்தால் கிள்ளுதல், தனம் - பெண்களின் முலை, காவேரி - கா - வேரி - காட்டில் தேனை உடைய, சிந்து - சிந்துகின்ற, கோதா - கோது - ஆ - சிந்தும் சக்கையாக (33ஆவது கண்ணிக்குச் சிலேடைப் பொருள் உண்டு. கிளிகள் தங்குகின்ற கனிதரும் மரங்களை உடைய சோலைகளைத் தத்தம் கரைகளில் கொண்டுள்ளதால் காவிரி, சிந்து, கோதாவிரி நதிகள் பெருமை பெறுகின்றன.)

(34-38 கண்ணிகள்)

- கூறில்அனம்
உன்னுடைய ஊணன்றோ ஊதப் பறந்துபோம்
சின்ன வடிவன்றோ செழுங்குயிலும் - என்னே
முதுவண்டு இனந்தான் முடிச்சு அவிழ்த்தாலும்
மதுவுண்டால் பின்னை வாயுண்டோ - எதிரும்
கரும்புறா வார்த்தை கசப்பென்று சொல்ல
வரும் புறாவுக்கு ஒரு வாயோ - விரும்புமயில்
உற்ற பிணிமுகமே உன்போல் சுகரூபம்
பெற்ற பறவை பிறவுண்டோ - கற்றறியும்
கல்வியும் கேள்வியும் நீ கைக்கொண்டாய் சாரிகைக்குள்
செல்வம் அதில்அள்ளித் தெளித்தாயோ.

பொருள்:

சிறப்பாகக் கூறினால் அன்னம் உன்னுடைய உணவல்லவோ. செழித்த குயில் பறவையும் மன் மதனுடைய சின்னமாக விளங்கும் சிறிய உருவமாகும். அது ஊதுவதற்குள் பறந்து போய்விடும். பழமையான வண்டுக் கூட்டமும் மொட்டுகளின் முடிச்சுகளை

Koviloor Digital Library

அவிழ்க்கக் கூடிய இயல்பினை உடையன. அவையும் மலரிலுள்ள மதுவை உண்ட பின்பு வாய் திறப்பதும் உண்டோ? இல்லை. எதிரே வரும் கருமையான புறாப் பறவைகளின் குரல் கேட்டால் கசப்பென்று சொல்ல வரும். எனவே, அத்தகைய புறாக்கள் ஒரு வாய்ச்சொல் பேசுவதற்கும் முடியுமா? முடியாது. அனைவராலும் விரும்பப் பெறும் மயில் என்ற பறவையும் உன்னைப் போலச் சுகவடிவம் கொண்ட பறவையாகுமா? இல்லையே. கற்றறிந்த கல்வியும் பிறர் சொல்லக் கேட்கின்ற கேள்விச் செல்வமும் நீ பெற்றிருக்கின்றாய். (நாகணவாய்ப் புள்ளிற்கு நீ அதனைச் சிறிது அள்ளித் தெளித்திருக்கின்றாய். அதனால்தான் அதுவும் பேசுகிறது).

சொ.பொ.வி:

இப்பகுதியில் சொல்லப் பெற்ற அன்னம், குயில், புறா, மயில், நாகணவாய்ப்புள் ஆகிய பறவைகள் தூது செல்வதற்கு உரியன அல்ல என்பது காரணங்களோடு கூறப் பெறுகிறது. அனம் - அன்னப்பறவை, ஊண் - உணவு, ஊத - ஊதினால், வடிவு - சிறிய வடிவு, மன்மதனின் ஊதுகருவி என்ற வடிவு, முது - பழமை, முடிச்சு - மொட்டின் முடிச்சு, கரும்புறா - கருமையான புறா, கரும்பு - உறா எனப் பிரித்தால் கரும்பின் சுவை பொருந்தாத கசப்பு என்றும் பொருள் தரும். பிணிமுகம் - மயிலின் நோயுற்ற முகம் (எனவே, அதற்குச் சுகவடிவம் இல்லை) சாரிகை - நாகணவாய்ப் பறவை.

(39-50 கண்ணிகள்)

- சொல்வேதம்

என்பரி நாலுக்கும் விதிசாரதி வில்வேள்
தன்பரியே உனக்குச் சாரதி யார் - வன்போரில்

Koviloor Digital Library

மேவும் சிவன் விழியால் வேள்கருகி நாண்கருகிக்
கூவும் பெரிய குயில் கருகிப் - பாவம்போல்
நின்று மறுப்பாடு நாள் நீதான் நடுப்படையில்
சென்று மறுப்படாதே வந்தாய் - என்றுமாக்
காய்க்கும் கனியல்லால் காய்ப்பூ என்றால் நாக்கு
மூக்கும் மறுப்பாய் முகம்பாராய் - ஆக்கம்
வரையாமல் நன்மை வரத்தினை நல்கும்
அரிதாளை நீவிட்டு அகலாய் - இருகை
உனக்கு இல்லை உன்சிறகுஇரண்டும் எனக்கில்லை
எனக்கும் உனக்கும் பேதம்ஈதே - மனைக்குள்
இதமாய் மனிதருடனே பழகுவாய் அன்பு
அதனால் முறையிட்டு அழைப்பாய் - மதுவுண்டு
அளிப்பிள்ளை வாய்குழறும் ஆம்பரத்தில் ஏறிக்
களிப்பிள்ளை பூங்குயிலும் கத்தும் - கிளிப்பிள்ளை
சொன்னதைச் சொல்லும் என்று சொல்லப் பெயர்கொண்டாய்
பின்னத்தை போலும் ஒரு பேறுண்டோ - அன்னமின்றிப்
பால்குடிக்கும் பச்சைக்குழந்தை நீ ஆனாலும்
கால்பிடிப்பார் கோடிபேர் கண்டாயே - மால்பிடித்தோர்
கைச்சிலை வேளால் வருந்தும் காமநோய் தீர்ப்பதற்கோ
பச்சிலை ரூபம் படைத்திருந்தாய் - அச்ச
மனப்பேதையார் மால்வனம் சுடவோ வன்னி
எனப்பேர் படைத்தாய் இயம்பாய்

பொருள் :

(சிவன் திரிபுரம் எரிக்கப் புறப்பட்ட பொழுது) சொல்லுகின்ற வேதம் நான்கும் குதிரைகளாக அமைய, அவற்றைச் செலுத்துகின்ற சாரதியாகப் பிரமன் விளங்கினான். வில் பிடித்த மன்மதனின் குதிரையே, உன்னைச் செலுத்தும் சாரதி யார்? (ஒருவரும் இல்லை)

Koviloor Digital Library

வன்மையான போரில் சிவபெருமானின் நெற்றிக்கண் விழியால் மன்மதன் கருகினான். அவன் கையில் இருந்த வில்லின் நாண்களாகிய வண்டும் கருகிற்று. அவனுடைய ஊதுகின்ற கருவியாகிய (சின்னம்) குயில் கருகிற்று. இவையெல்லாம் கருகிப் பாவம் போல நின்று கருப்பு நிறம் அடைந்த பொழுது நீ மட்டும் அப்போரின் நடுவில் குதிரையாகச் சென்றும் கருமையாக மாறாது பச்சை நிறத்தோடு நின்றாய்.

எப்பொழுதும் மாமரத்தில் காய்க்கும் கனியைத் தவிரக் காய், பூ என்றால் நாக்கால் சுவைக்காது மூக்கால் அறுத்துக் கீழே விழச் செய்வாய். அவற்றை முகம் கொண்டும் பார்க்கமாட்டாய். செல்வம் நீங்காமல் நன்மை கிடைக்கத் தினைக் கதிரை அறுத்த பிறகு எஞ்சி இருக்கும் தாளை விட்டு நீ விலகாது இருப்பாய். (அரி தாளை என்பதற்குத் திருமாலின் திருவடி என்று கொண்டு செல்வம் குறையாத நல்ல வரத்தினைத் தரும் அத் திருவடிகளை விட்டு நீங்காய் என்ற பொருளும் கொள்ளலாம்). எனக்குள்ள இரண்டு கைகள் உனக்கு இல்லை. உனக்கு இருக்கும் சிறகுகள் இரண்டும் எனக்கில்லை. நம் இருவருக்கும் உள்ள வேறுபாடும் இதுவே ஆகும்.

வீடுகளில் வாழும் மக்களுடன் இதமாகப் பழகு வாய், அன்புடன் அவர்களை உறவுகள் சொல்லி அழைப்பாய். வண்டு என்கின்ற பிள்ளைகள் மதுவாகிய தேனை உண்பதால் வாய் குழறும். குயில் பிள்ளைகளோ மாமரத்தில் ஏறிக் கத்தும். ஆனால், கிளிப்பிள்ளையோ சொன்னதைச் சொல்லும் என்று உலகோர் பாராட்டும்

Koviloor Digital Library

பேறு பெற்றாய். அதைப் போல வேறு சிறந்த பேறு (சிறப்பு) உண்டோ? இல்லை.

சோறு உண்ணாமல் பாலை மட்டும் குடிக்கின்ற பச்சைக் குழந்தையாய் நீ இருந்தாலும் உன்னுடைய கால்களைப் பிடிக்கின்றவர்கள் உலகில் கோடிப்பேர் இருக்கின்றார்கள். நீ கண்டதில்லையோ. காதல் மயக்கம் கொண்ட மங்கையர் கையில் வில்லினைக் கொண்ட மன்மதனால் ஏற்படுகின்ற அவர்தம் காம மயக்கத்தைத் தீர்ப்பதற்கோ (மருந்தாக அமையும்) பச்சை இலையாய் அதன் நிறத்தை, வடிவைப் பெற்றிருக்கின்றாய். அஞ்சு கின்ற அப்பெண்களின் காம மயக்கமாகிய காட்டைச் சுடவோ நீ வன்னி (நெருப்பு) என்ற பெயரைப் பெற்றுள்ளாய். கூறுவாயாக.

சொ.பொ.வி:

பரி - குதிரை, விதி - விதியைத் தரும் பிரமன், சாரதி - தேர் ஓட்டுபவர் மறுப்படாதே - குற்றமாகிய கருப்பு படாதே, மா - மாமரம், ஆக்கம் - செல்வம், அரிதாள் - கதிர் அரிந்த தாள், திருமாலின் திருவடிகள், பேதம் - வேறுபாடு, மனை - வீடு, முறையிட்டு - உறவு கூறி, அளி - வண்டு, ஆம்பரம் - மாமரம், அத்தை போலும் - அதைப் போலும், மால் - மயக்கம்.

(51-60 கண்ணிகள்)

- அனத்தை
நிலவோ என்பார்கள் நெடுந்துயர் வேழத்தைக்
கொலவோ அரிவடிவம் கொண்டாய் - சிலைநுதலார்
கொள்ளை விரகக் கொடும்படையை வெல்லவோ
கிள்ளை வடிவெடுத்தாய் கிற்பாய்நீ - உள்ளம்

Koviloor Digital Library

மிகவுடை மாதர் விதனம் கெடவோ
சுகவடிவு நீகொண்டாய் சொல்லாய் - தகவுடைய
தத்தை அடைந்தவர் ஏதத்தை அடையார்என்னும்
வித்தை அடைந்தாய் உனையார் மெச்சவல்லார் - முத்தமிழோர்
மாரதி பாரதியாருக்கு உன்னை உவமானிப்பார்
ஆரதிகம் ஆர்தாழ்வு அறைந்திடாய் - ஊரறிய
நெய்யில் கையிட்டாலும் நீதான் பசுமையென்றே
கையிட்டுச் சுத்தீகரிக்கலாம் - மெய்யின்
வடிவம் வளைந்த மணிமூக்கு மாயன்
கொடியில் இருப்பவர் தம்கூறோ - நெடியமால்
விண்டு தரித்து ஊதுவேணு கானத்திலே
பண்டு தழைத்த பசுந்தழையோ - கொண்டசிறகு
அல்இலங்கு மெய்யானை அன்றுஅழித்து வீடணன்போய்த்
தொல்லிலங்கை கட்டு புதுத் தோரணமோ - நல்வாய்
மழலை மொழிதான் மணிவண்ணன் செங்கைக்
குழலின் இசைதானோ கூறாய்

பொருள் :

அன்னப் பறவையை நிலவென்று எண்ணி (காதலரைப் பிரிந்திருக்கும் மங்கையர்) வருந்துபவர்களின் பெருந்துயராகிய யானையைக் கொல்வதற்கோ நீ அரி வடிவம் கொண்டாய். வில்லைப் போன்ற நெற்றியை உடைய பெண்களின் காமநோய் என்னும் கொடிய பகையை வெல்வதற்கோ நீ கிள்ளை வடிவம் எடுத்தாய். நீ மிகவும் வலிமை மிக்கவன் ஆகின்றாய். காமநோய் மிகவுடைய பெண்களின் வேதனையைக் கெடுக்கவோ நீ சுகம் என்ற வடிவெடுத்து வந்துள்ளாய் கூறுவாயாக.

Koviloor Digital Library

தகைமையுடைய கிளியைப் பெற்றவர்கள் துயரத்தை அடையமாட்டார்கள் என்னும் வித்தையை நீ பெற்றிருக்கின்றாய் (அதாவது கிளியின் மழலைப் பேச்சில் துயரை நீக்கி மகிழுதல்) ஆதலால் உன்னைப் புகழ வல்லமை உண்டோர் உண்டோ. முத்தமிழைக் கற்றோர் உன்னை ரதிக்கும் கலைமகளுக்கும் உவமை யாகக் கூறுவார்கள். அவ்விருவரையும் உன்னையும் காணும்போது உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார்? (உவமை உவமேயங்களில் ஒன்று தாழ்ந்திருக்க ஒன்று உயர்ந்திருக்க வேண்டும். எனவேதான் இக்கேள்வி எழுகின்றது)

நீ தான் மிக்க பசுமை நிறம் உடையாய் என்பதை ஊரார் அறிய சுடுகின்ற நெய்யில் கையிட்டுத் தூய்மை யாகச் சத்தியம் செய்து கூறலாம். (பண்டைக் காலத்தில் உண்மையை நிரூபிக்கச் சுடுநெய்யில் கையிடுவது வழக்கம்) உன்னுடைய வடிவமும் வளைந்த மூக்கும் திருமாலின் கொடியில் இருக்கின்ற கருடனின் கூறாக உனக்கு வாய்த்தனவோ, நீண்ட திருமால் கிருஷ்ணா வதாரத்தில் மூங்கிலை அறுத்துப் புல்லாங்குழலாகச் செய்து ஊதிய இசைகேட்டுத் தழைத்த பச்சிலைதான் உனக்குச் சிறகுகளாக அமைந்தனவோ. உன்னுடைய சிறகுகள் இருண்ட மனம் படைத்த இராவணனை இராமன் அழித்த பிறகு வீட்டணன் அரசேற்ற போது இலங்கையில் கட்டப் பெற்ற மாவிலைத் தோரணங் களோ. உன்னுடைய நல்ல வாயினிடத்தில் தோன்றும் மழலை மொழிதான் நீலமணி வண்ணனாம் கண்ணனின் சிவந்த கையில் இருக்கும் புல்லாங்குழலின் இசையோ.

Koviloor Digital Library

சொ.பொ.வி:

அனத்தை - அன்னப் பறவையை, வேழம் - யானை, அரி - சிங்கம், சிலை - வில், கொள்ளை - கொடிய, கிற்பாய் - வலிமை, விதனம் - துன்பம், ஏதம் - துயரம், பாரதி - கலைமகள், சுத்தீகரித்தல் - சத்தியம் செய்தல், மாயன் - திருமால், விண்டு - அறுத்து, வேணுகானம் - இசை, அல் - இருட்டு, மெய்யானை - இராவணனை, மணிவண்ணன் - கிருஷ்ணன்.

(61-66 கண்ணிகள்)

- அழகுக்
கிளிப்பிள்ளாய் தெள்ளமுதக் கிள்ளாய் நலங்குக்
குளிப்பிள்ளாய் இன்ப ரசக்குஞ்சே - வளிப்பிள்ளை
தன்னைத் தாய்போல் எடுத்துச் சஞ்சரிக்கும் சம்பத்தாய்
பின்னைத்தாய் கையிலுறை பெண்தத்தாய் - பொன்ஒத்தாய்
முத்திநகர் ஏழில் ஒன்றே முத்தமிழ் வல்லாறில் ஒன்றாய்
ஒத்ததனித் தவ்வரிப்போ் உற்றது ஒன்றே - சுத்தம்உறும்
ஐந்துபூதத்தில் ஒன்றே ஆனபடை நான்கில் ஒன்றே
முந்து முதலான பொருள்மூன்றில் ஒன்றே - வந்த
இருபயனில் ஒன்றே இமையே விழியே
பருவ விழியில் உறைபாவாய் - ஒருநாரில்
ஏற்றும் திருமாலை எய்தப்போய் ஊரெல்லாம்
தூற்றுமலர் கொண்டகதை சொல்லக்கேள்

பொருள்:

அழகுடைய கிளியே, தெள்ள முதக் கிளியே, நறுமணப் பொருளால் மங்கையர் குளிப்பாட்டும் கிள்ளையே, இன்பச் சுவை கொண்ட குஞ்சே, காற்று என்ற பிள்ளையைத் தாய் போல இழுத்துச் சஞ்சரிக்கின்ற

Koviloor Digital Library

செல்வமே, நப்பின்னையின் கையில் இருக்கின்ற பெண்ணாகிய தத்தையே, பொன்னை ஒத் தவளே, முத்தி தரும் ஏழு நகர்களில் ஒன்றே, முத்தமிழில் உள்ள வல்லெழுத்து ஆறுல் ஒன்றாய் அமைந்த தகர வரி அமைந்த பெயரை உடையாய் (தத்தை என்ற மூன் றெழுத்தும் தகர வரிசையாய் அமைந்தமை சிறப்பாகும்) தூய்மையாகிய ஐம்பூதங்களில் ஒன்றின் பெயரை உடையாய், (வன்னி - நெருப்பு) அரசர்களுக்கு உரிய படை நான்கில் ஒன்றின் பெயரை உடையாய் (கிள்ளை - குதிரை), முதன்மையான மூன்று பரம் பொருள்களில் ஒன்றே (அரி), மக்களை வந்தடையும் இரு பயன்களில் ஒன்றே (சுகம், துக்கம் - இதில் சுகம்), என்னைக் கண்போல் காக்கும் இமையே, அனைத்தையும் காட்டும் விழியே, விழியில் உறையும் கருமணியே, நாரில் அன்பாகிய மலரைத் தொடுத்துப் போற்றுகின்ற திருமாலை அடைய விரும்பி நான் பெற்ற ஊரார் அலர் தூற்றும் கதையைச் சொல்கின்றேன் கேள்.

சொ.பொ.வி:

குளி - நலங்குக்குரிய நறுமணப் பொருள்களால் குளிப் பாட்டுதல், ரசம் - சுவை, வளி - காற்று, பின்னை - நப்பின்னை, முத்திநகர் ஏழு - அயோத்தி, மதுரை, மாயை காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை, முந்து - முதன்மையான, பாவாய் - கண்ணின்மணி, அலர் - பழி. கதைசொல்லக்கேள் - தலைவி கிளியிடம் இனிவரும் பகுதிகளில் தனக்கு ஏற்பட்ட காதலையும், காதல் தலைவனின் பெருமைகளையும் கூறப் போகின்றாள்.

Koviloor Digital Library

அழகரின் பெருமை

இத்தூது நூலுக்குரிய பாட்டுடைத் தலைவனாம் அழகர்மலைத் திருமாலின் பெருமைகளைத் தலைவி சொல்வதாகும்.

(67-76 கண்ணிகள்)

- தோற்றி

அரிவடிவுமாய்ப் பின்னரன் வடிவுமாகிப்
பெரியது ஒரு தூணில் பிறந்து - கரிய
வரைத் தடந்தோள் அவுணன் வன்காயம் கூட்டி
அரைத்து இடும்சேனை அருந்தி - உருத்தினராய்ப்
பண்ணும் தொழிலைப் பகைத்து நிலக்காப்பும் அணிந்து
உண்ணும் படிஎல்லாம் உண்டுஅருளி - வெண்ணெயுடன்
பூதனை தந்தபால் போதமலே பசித்து
வேதனையும் பெற்று வெளிநின்று - பாதவத்தை
தள்ளுநடை இட்டுத் தவழ்ந்து விளையாடும்
பிள்ளைமை நீங்காத பெற்றியான் - ஒள்இழையார்
கொல்லைப் பெண்ணைக் குதிரை ஆக்கும் திருப்புயத்தான்
கல்லைப் பெண்ஆக்கும் மலர்க்காலினான் - சொல் கவிக்குப்
பாரம் முதுகுஅடைந்த பாயலான் விண்ணவர்க்கு
ஆரமுது கடைந்த அங்கையான் - நாரியுடன்
வன்கானகம் கடந்த வாட்டத்தான் வேட்டுவற்கு
மென்கால் நகங்கள் தந்தவீட்டினான் - என்காதல்
வெள்ளத்து அமிழ்ந்திேனான் வேலைக்கு மேல் மிதந்தோன்
உள்ளத்து உள்ளான் உலகுக்கு உப்பாலன் - தெள்ளிதின்
வெட்ட வெறுவெளியிலே நின்றும் தோற்றாதான்
கிட்ட இருந்தும் கிடையாதான்

Koviloor Digital Library

பொருள் :

முதலில் சிங்க வடிவமும் பின் மனித வடிவமும் ஒரு சேரத் தோன்றிட அமைந்த நரசிங்கமாக ஒரு பெரிய தூணில் பிறந்து, கரிய மலை போன்ற தோள்களை உடைய இரணியன் என்ற அசுரனது வலிய உடம்பை க் கட்டிப் பிடித்துப் பூமியில் போட்டு அரைத்து அவனுடைய சேனைகளை எல்லாம் கொன்று அதாவது அழிக்கும் உருத்திரனாகி அவனுடைய அழித்தல் தொழிலைத் தானே செய்து, அத்தொழிலுக்குப் பகையாக இருக்கும் (திருமாலாம்) தன்னின் காத்தல் தொழிலையும் செய்து, உண்ணுகின்ற பூமி முழுவதையும் உண்டு, அருள்புரிந்து, வெண்ணெயும், பூதனை என்ற அரக்கி கொடுத்த பாலும் போதாமல் மேலும் பசிகொண்டு வேதங்களைப் படைத்த பிரமனைப் பெற்று, அண்டவெளி எங்கும் தோன்றி, நற்பண்புகளை விட்டுவிட்டுக் குழந்தைத் தனமாக நடையிட்டுத் தவழ்ந்து விளையாடும் குழந்தைத்தன்மை நீங்காத சிறப்பினை உடையவன்.

வளையல் அணிந்த பெண்மக்கள் தோட்டத்தில் வளர்த்த பனைமரத்தைக் குதிரையாக்கி மடலேறுவதற்கு உரிய சிறந்த தோள்களை உடையவன், கல்லைப் பெண்ணாக்கும் காலினை உடையவன், திருமழிசை ஆழ்வார் பாடிய கவிதைக்காகப் பாம்புப் பாயினைச் சுட்டிச் சுமந்த முதுகினை உடையவன், தேவர்களுக்காக அமுதத்தைக் கடைந்த கைகளை உடையவன், சீதை என்ற பெண்ணுடன் காட்டினைக் கடந்து சென்ற துன்பத்தை உடையவன், ஒரு வேடனுக்குத் தன்னுடைய

Koviloor Digital Library

கால் நகங்களைத் தந்து, அவனை முத்தி பெறச் செய்தவன், என்னுடைய காதல் என்னும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றவன், கடலின்மேல் ஆலிலையில் மிதப்பவன், எல்லோர் உள்ளத்திலும் உள்ளவன், உலகிற்கு அப்பாற்பட்டவன், தெளிந்த வெட்ட வெளியில் இருந்தாலும் யாருக்கும் தோன்றாதவன், மிக அருகில் இருந்தாலும் அடைய முடியாதவன்.

சொ.பொ.வி:

அரி - சிங்கம், அரன் - மனிதன், வரை - மலை, அவுணன் - இரணியன், காயம் - உடம்பு, உருத்திரன் - சிவன், தொழில் - அழித்தல் தொழில், காப்பு - காத்தல், பூதனை - அரக்கி, வேதனை - வேதம் அருளிய பிரமன், பாதவத்தை - பா - தவம் - நல்ல குணங்கள், இழை - வளையல், பெண்ணை - பனைமரம், புயம் - தோள், பாரம் - பாய்ச்சுருட்டு, நாரி - சீதை, வாட்டம் - வருத்தம், வேலை - கடல், உப்பால் - அப்பால்.

புராணக் கருத்துக்கள் :

67, 68ஆம் கண்ணிகள் - பக்த பிரகலாதனுக்காக நரசிங்க வடிவத்தில் தோன்றி இரணியனை அழித்த வரலாறு கூறப் பெற்றுள்ளது.

70 வது கண்ணி - கிருஷ்ணனைக் கொல்வதற்காக அவன் மாமன் கம்சன் பூதகி என்ற அரக்கியை அனுப்பிப் பால் முட்டக் கொடுத்துக் கொல்ல முற்பட்டான். ஆனால், கிருஷ்ணனோ அவளுடைய மார்பகப் பால் முழுதும் உறிஞ்சி அவளை அழித்தான்.

Koviloor Digital Library

71வது கண்ணி *– கம்சன் அரக்கர்களை மருதமரமாக நிற்க வைத்து உரலில் கட்டப் பெற்ற கிருஷ்ணன் மீது சாய்த்துக் கொல்லமுற்பட்டான். ஆனால், கிருஷ்ணனோ உரலோடு சென்று மரங்களைச் சாய்த்து அழித்தான்.*

72வது கண்ணி *– இராமாயணத்தில் கால் தூசிபட்டுக் கல்லாய்க் கிடந்த கவுதம முனிவரின் மனைவி அகலிகை பெண்ணாய்த் தோன்றிய வரலாறு.*

73வது கண்ணி: *திருமழிசை ஆழ்வாரின் பெருமைகளைக் கேட்ட பல்லவ மன்னன் ஆழ்வாரின் தொண்டனாகிய கணிகண்ணனிடம் தன்னை ஆழ்வார் இளம் பருவத்தினனாக ஆக்கும்படி சொல் என்று கூறினான். அதற்குச் சொல்லமாட்டேன் என்று கணிகண்ணன் மறுத்தான். எனவே, கணிகண்ணனை மன்னன் நாடு கடத்தினான். அதனைக் கேள்வியுற்ற ஆழ்வார் காஞ்சிப் பெருமாளைக் கணிகண்ணன் போகின்றான், மணி வண்ணா நீ கிடக்க வேண்டாம் என்று பாடிட, பெருமாள் தன் படுக்கையாகிய பாம்புப் பாயைச் சுருட்டிக் கொண்டு சென்றார்.*

74வது கண்ணி : *திருமால் கண்ணனாகப் பிறந்து கௌரவர்களைக் கொன்று பூமி பாரத்தை நீக்கி வைகுண்டம் புறப்பட்ட பொழுது ஒரு காட்டில் தங்கினார். ஒரு காலின்மேல் மற்றொரு காலை வைத்துப் படுத்திருந்தார். அவரின் கால் நகத்தை அங்கு வந்த சரண் என்ற வேடன் மான் என்று கருதி அம்பு எய்தான். எய்த மானைப் பிடிக்க வந்த பொழுது தன் தவறை உணர்ந்தான். அறியாத பிழை செய்ததற்காகக் கண்ணனைப் பொறுத்*

Koviloor Digital Library

தருளுமாறு வேண்டினான். அவன் பிழையைப் பொறுத்துக் கண்ணன் அவனுக்கு முத்தி கொடுத்தார். எனவே, கால் நகத்தைக் காட்டி முத்தி கொடுத்தமை கூறப் பெற்றுள்ளது.

68 முதல் 71 கண்ணிகளுக்குச் சிலேடைப் பொருள் கூறுவதும் உண்டு. காயம் கூட்டி அரைத்த சேனையை அருந்தி உருவம் உறுதி உடையவர் ஆகிச் செய்யும் தொழில்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு மண்ணைக் குழைத்துப் பொட்டாக அணிந்து உண்ண வேண்டிய உணவுகளை எல்லாம் உண்டு, வெண்ணெயுடன் தாய் தந்த பாலை உண்டு போதாமல் துன்பம் அடைந்து, தவத்தை நீங்கி மழலை ஒழுக்கம் கொண்டு விளையாடும் பிள்ளைத் தன்மை.

(77-87 கண்ணிகள் வரை)

- தட்டாதுஎன்.
எண்ணிலே மாயன்எனும் பேரினால் ஒளிப்போன்
கண்ணன் எனும்பெயரால் காண்பிப்போன் - எண்ணுங்கால்
எங்கும் இலாதுஇருந்தே எங்கும் நிறைந்து இருப்போன்
எங்கும் நிறைந்துஇருந்தே எங்கும் இலான் - அங்குஅறியும்
என்னை எனக்கு ஒளித்து யான் என்றும் காணாத
தன்னை எனக்கு அருளும் தம்பிரான் - முன்னை வினை
கொன்று மலமாயைக் கூட்டம் குலைத்து என்னை
என்றும் தனியே இருத்துவோன் - துன்று பிர(மா)
மாவும்நான் மன்னுயிரும் நான் அவ்விருவரையும்
ஏவுவான் தானும் நான்என்று உணர்த்தக் - கோவலர்பால்
ஆனும்ஆய் ஆன்கன்றுமாகி அவற்றை மேய்ப்
பானும் ஆய்நின்ற பரஞ்சோதி - மாநரகப்

Koviloor Digital Library

பேர்இருள் நீக்கப் பெருந்தவம் வேண்டா உடலில்
ஆருயிர் கூட்ட அயன் வேண்டா - பாரும் எனச்
சங்கத் தொனியும் தடங்குழல் ஓசை எனும்
துங்கத் தொனியும் தொளிப்பிப்போன் பொங்கும் அலை
மோதும் பரன் ஆதிமூலம் இவன் என்றே
ஓதும் கரிஒன்று உடைய மால் - மூதுலகைத்
தந்திடுவோனும் துடைப்போன் தானும்நான்என்று திரு
உந்தியால் வாயால் உரைத்திடுவோன் - பைந்தமிழால்
ஆதிமறை நான்கையும் நாலாயிரத்து நற்கவியாய்
ஓதும் பதினொருவர் உள்ளத்தான்

பொருள் :

மாயன் என்னும் பெயருக்கு ஏற்ப என் உள்ளத்தில் நீங்காது மாயம் செய்து மறைந்திருப்பவன். கண்ணன் எனும் பெயருக்கு ஏற்ப எல்லோருக்கும் உறுதிப் பொருளைக் காட்டுபவன். எங்கும் இல்லாது இருந்தே எங்கும் நிறைந்திருப்பவன். எங்கும் நிறைந்திருந்தாலும் காண முடியாது மறைந்திருப்பவன். அவன் அறிந்து கொண்ட என்னை எனக்குள் என்னையே ஒளித்து வைப்பவன். என்றும் நான் கண்டு உணர முடியாத தன்னை எனக்குக் காட்டி அருளும் தன்மையன். என்னுடைய முன்னை வினைகளை ஒழித்து, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களின் வாட்டத்தைத் தொலைத்து என்றும் என்னைத் தனியே இருக்குமாறு செய்பவன். எல்லா உயிர்களையும் நெருங்கி விதியை எழுதுகின்ற பிரமனும் நானே, பிரமன் படைக்கும் மன்னுயிரும் நானே என்பதைக் காட்டிப் பிரமனையும் உயிர்களையும் ஏவித் தொழில்களை நடத்தும் தலைவனும் நானே என்று உணர்த்திட முற்காலத்தில்

Koviloor Digital Library

இடையர்கள் ஊரில் உள்ள பசுக்களாகவும், கன்று களாகவும், அவற்றை மேய்க்கும் இடையனாகவும் தோன்றி நின்ற ஒளிப் பொருளாவான். கொடிய நரகம் என்னும் பெரிய இருட்டைத் தொலைப்பதற்கு நீங்கள் தவங்களைச் செய்ய வேண்டியதில்லை. மேலும் உடம்புகளில் அருமையான உயிரைச் சேர்ப்பதற்குப் பிரமனும் வேண்டுவதில்லை. ஆராய்ந்து பாருங்கள் என்று உயிர்களுக்குக் காட்டுவதுபோலச் சங்கின் முழக்கமும், குழல் ஓசையையும் தோன்றும்படி வாயில் வைத்து ஊதிக் காட்டுபவன். பாற்கடலில் அறிதுயில் புரியும் பரம்பொருள். ஆதிமூலமே இவன் என்று கூப்பிட்ட யானையை ஏற்றுக் கொண்ட திருமால். தொன்மையான உலகினைத் தருபவனும் அதனை அழிப்பவனும் நானே என்பதை உணர்த்தத் தன் உந்தியில் பிரமனைப் படைத்தும், வாயினால் பூமியை உண்டும் உணர்த்தியவன். தொன்மையான வேதங்கள் நான் கினையும் தமிழில் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனும் நற்கவியாக ஓதிய ஆழ்வார் பதினொருவரின் உள்ளத்தில் இருப்பவன்.

சொ.பொ.வி:

தட்டாது - நீங்காது, மலமாயைக் கூட்டம் - ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றின் கூட்டம், ஆன் - பசு, கரி - யானை, பதினொருவர் - பேயாழ்வார், கூரத்தாழ்வார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

Koviloor Digital Library

புராணச் செய்தி :

82வது கண்ணி - கண்ணன் நந்தகோபன் மனையில் வாழும் பொழுது, பிரமன் பசுக்கன்றுகளையும் சிறுவர் களையும் கண்ணனுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்தான். அதனை அறிந்த கண்ணன் பசுங்கன்றுகளாகவும், இடைச் சிறுவர்களாகவும் உருவம் கொண்டு காட்சி தந்தான் என்று பாகவதம் கூறுகிறது.

83வது கண்ணி : பாரதப் போர் பதினான்காம் நாளில் கண்ணனின் சங்கொலி கேட்ட யாவரும் வைகுந்தம் புகுந்தனர். கண்ணன் கையில் இருந்த குழலோசை கேட்ட பட்டமரங்கள் எல்லாம் உயிர் பெற்றுத் தழைத்தன. எனவே, நரகத்தின் பேரிருள் நீக்குவது சங்கொலி, மரங்களைத் தழைக்கச் செய்வது குழலொளி என்பது கூறப்பெற்றுள்ளது.

<u>(87-96 கண்ணிகள்)</u>

- பாதம்எனும்
செந்தாமரை மலரில் சிந்தியதேன் போல்
மந்தாகினி வழியும் வண்மையான் - சந்ததமும்
ஆன்ற உலகம் அறியும் அறியாமையுமாத்
தோன்றத் துயிலாத் துயில் கொள்வோன் - ஈன்றவளைத்
தெள்ளு மணிவாயில் காட்டிச் செகம்புறமும்
உள்ளும் இருப்பது உணர்வித்தோன் - கொள்ளைக்
கவற்சிதரு சென்மக் கடலில் கலந்த
அவிச்சை உவர்வாங்க முகில் ஆனோன் - நிவப்பா
மடங்கும் பரசமய வாத நதி வந்து
அடங்கக்கருங்கடலும் ஆனோன் - உடம்பில்
புணர்க்க ஒரு கிரணம் போலும்எனையும் கொண்டு

Koviloor Digital Library

அணைக்க மணிநிறமும் ஆனோன் - பணைக்கும்
விசைப் பூதல ஊசல் மீதில் இருப்போனும்
அசைப்போனும் தான்ஆகும் அண்ணல் - இசைத்துஇசைத்து
ஊன் பிடிக்கும் வேடர் ஒருபார் வையால் நூறு
மான் பிடிக்கின்ற வகை என்னத் - தான் படைத்த
என்பிறவி எண்பத்துநான்கு நூறாயிரமும்
தன்பிறவி பத்தால் தணித்திடுவோன்.

பொருள்:

செந்தாமரை மலரிலிருந்து தேன் பொழிவதுபோல் தன் பாதத்திலிருந்து கங்கையாற்றை வழியச் செய்த வன்மை உடையவன். எப்பொழுதும் இந்த உலகம் அறிவுள்ளது போலவும் அறிவற்றது போலவும் தோன்றும்படியாகத் தூங்கியும் தூங்காமலும் அறிதுயில் கொண்டிருப்பவன். தன் அன்னையாகிய யசோதைக்குத் தன் திருவாயைத் திறந்து காட்டி வெளியிலுள்ள உலகம் முழுவதும் தனக்குள்ளும் இருக்கிறது என்று உணர்த்தியவன். பெருந்துன்பத்தைத் தரும் பிறவிப் பெருங் கடலில் கலந்துள்ள அவிச்சை என்னும் உவர்ப்புச் சுவையை நீக்குவதற்காகக் கடல்நீரை உண்டு மழை பொழிய மேகமாகக் காட்சி தருபவன். உயர்வு காட்டி மடங்கி மடங்கி வருகின்ற பல்வேறு சமயங்களாம் ஆறுகள் வந்து அடங்குவதற்காகக் கருமையான கடல் வடிவு கொண்டவன்.

தன் உடம்புக்குள் ஒளிக்கதிராக என்னையும் சேர்த்துக் கொள்வதற்காக நீலமணி நிறமாகியவன். விரைவாக அசையும் பூமி என்ற ஊஞ்சலில் அமர்ந்திருப்பவன்.

Koviloor Digital Library

அந்த ஊஞ்சலைத் தானே அசைக்கின்றவனாகவும் இருப்பவன்.

விலங்குகளைப் பிடிக்கும் வேடர்கள் ஒரு பார்வை விலங்கால் நூறு விலங்குகளைப் பிடிக்கின்ற தன்மை போல, எனக்குரிய எண்பத்தி நான்கு நூறாயிரம் பிறவிகளைத் தன் பத்துப் பிறவிகளால் (அவதாரங்கள்) தீர்த்து அருளியவன்.

சொ.பொ.வி:

பாதம் - திருவடி, மந்தாகினி - கங்கை, ஈன்றவள் - யசோதை, அவிச்சை - அஞ்ஞானம், கிரணம் - ஒளி, பூதலம் - பூமி, பார்வை - பார்வை மிருகம்.

பத்து அங்கங்கள்

திருமாலின் பெருமைகளைக் கூறி வருகின்ற தலைவி 97வது கண்ணி முதல் 123வது கண்ணி வரை திருமாலின் பத்து அங்கங்களின் சிறப்புக்களைக் கூறுகிறாள். பூவுலகில் வாழும் மன்னர்களுக்குப் பத்து உறுப்புக்கள் இருப்பதுபோல இறைவனுக்குப் பத்து உறுப்புக்கள் கூறுவது இலக்கிய மரபாகும்.

அழகர் மலை (97-100 கண்ணிகள்)

-முன்பு புகழ்ந்து
ஏத்தி இருவர் நீங்காது இருக்கையாலே கேச
வாத்திரி என்னும் அணிபெற்று - கோத்திரமாம்
வெம் காத்திரம்சேர் விலங்குகளை மாய்த்திடலால்
சிங்காத்திரி என்னும் சீமருவி - எம்கோமான்

Koviloor Digital Library

மேய்த்த நிரைபோல வெற்புகள் எல்லாம் சூழ
வாய்த்த நிரையில் ஒருமால் விடையாய்ப் - பார்த்திடலால்
இன்னியம் ஆர்க்கும் இடபகிரி என்னும் பேர்
மன்னியசோலை மலையினான் -

பொருள் :

முன்னே நின்று சிறப்பினைக் கூறித் துதிக்கும் பிரமனும் சிவனும் நீங்காமல் இருக்க, கேசவாத்திரி என்னும் அழகினைப் பெற்று, இனமாகிய துன்ப உடம்பைப் பெறுகின்ற பிறவியாகிய விலங்குகளைக் கெடுத்ததால் சிங்காத்திரி என்னும் சிறப்புப் பெற்று, எம்பெருமானாகிய திருமால் கண்ணனாய் நின்று மேய்த்த பசுக்கூட்டங்கள் போலச் சிறு குன்றுகள் எல்லாம் சூழ்ந்து நிற்க, அவற்றின் நடுவே பெரிய காளை போல யாவரும் காணும்படி தோன்றுவதால், இனிய இசைக் கருவிகள் முழங்குகின்ற இடபகிரி என்னும் பெயர் பொருந்திய சோலை மலையை உடையவன்.

சொ.பொ.வி:

இருவர் - பிரமன், சிவன் - அணி - அழகு, கோத்திரம் - இனம், காத்திரம் - உடல், வெற்பு - சிறுகுன்று, விடை - எருது, இன்னியம் - இசைக்கருவி.

ஆறு (101-103 கண்ணிகள்)

- எந்நாளும்
பொற்சிலம்பில் ஓடும்சாம்பூநதம் போல் மாணிக்க
நற்சிலம்பில் ஓடும்நதியாகிக் - கல் சிலம்பில்
இந்திரன் போலும் இடபாசலம் அவன்மேல்

Koviloor Digital Library

வந்த விழிபோலும் வளச்சுனைகள் - முந்துதிரு
மாலுடைய தோளின் மணிமார்பின் முத்தாரம்
போல வரு நூபுரநதியான் -

பொருள் :

எந்நாளும் பொன்மலையாகிய இமயமலையில் வற்றாது ஓடுகின்ற சாம்புநதம் என்னும் ஆற்றினைப் போல, மாணிக்கச் சிலம்பாகிய (திருமாலின் திரு வடியில் உள்ள சிலம்பு மாணிக்கச் சிலம்பாகும்) அழகர் மலையில் பெருகி வரும் நதியாகி, கற்குன்றுகளில் இடபமலை (அழகர் மலை) இந்திரனைப் போலவும், அம்மலையின் மேல் உள்ள சுனைகள் அவ்இந்திரனின் உடம்பில் உள்ள ஆயிரம் விழிகளைப் போலவும் காட்சி தர, அனைத்துத் தெய்வங்களுக்கும் முதன்மையாக விளங்கும் திருமாலின் தோளிலும் மார்பிலும் கிடக்கின்ற முத்துமாலையைப் போலத் தோன்றும் நூபுர நதியை உடையவன்.

சொ.பொ.வி:

பொற்சிலம்பு - இமயமலை, சாம்புநதம் - நதி, கற்சிலம்பு - கற்குன்று, இடபாசலம் - அழகர்மலை, விழி - கண்கள், நூபுரநதி - அழகர் மலையில் உள்ள சிலம்பாறு.

நாடு (104-106 கண்ணிகள்)

- சீலம்உறும்
பன்னிரு செந்தமிழ்சேர் நாடுகளும் பார்மகளுக்கு
முன் இருக்கை காது முலை முகம் கால் - பின்னகம்கண்
காட்டும் அவற்றுள் கனகவரை மீதுபுகழ்

Koviloor Digital Library

தீட்டும் புனல்நாடும் தென்நாடும் - நாட்டமாம்
அந்நாடு இரண்டில் அருள்சேர் வலக்கண் எனும்
நல்நாடாம் தென்பாண்டி நாட்டினான் -

பொருள் :

நல் ஒழுக்கம் உள்ள செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரெண்டும் பூமகளுக்கு முறையே இருகை, இரு செவிகள், இரண்டு முலை, ஒரு முகம், இருகால்கள், கூந்தல், இரு கண்கள் ஆகியவை அங்கங்களாகும். இந்த அங்கங்களுள் பொன் மலை யாகிய இமயமலையில் தமது புகழைப் பதித்த புனல் நாடும் (சோழநாடும்) தென்னாடும் (பாண்டியநாடு) இரு கண்களாகும். கண்களாக விளங்கும் அவ்விரண்டில் அருள் நிறைந்த வலக்கண் என்னும் நல்ல நாடாகிய தென்பாண்டி நாட்டை உடையவன்.

சொ.பொ.வி:

சீலம் - ஒழுக்கம், செந்தமிழ்சேர் நாடுகள் - செந்தமிழ் மொழி வழங்கும் நாட்டைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கொடுந்தமிழ் நாட்டுப் பகுதிகள் என்பர். அவை பன்னிரெண்டு. தென்பாண்டி, குட்டம், குட, கற்கா, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவாவட தலைநாடு, சீதநாடு, மலாடு, புனல்நாடு, பார் - பூமி, கனகவரை - பொன்மலையாகிய இமயமலை, நாட்டம் - கண்.

(107-111 கண்ணிகள்)

- பொன்னுருவர்

சந்த்ர வடிவாம் சோமச்சந்திர விமானத்தை
இந்திர விமானம் இது என்றும் - மந்த்ர விரு(து)

Koviloor Digital Library

துக்கொடி ஏறும் துவசத்தபம்பம் வல்லிசா(த)
தக்கொடி ஏறு கற்பதாரு என்றும் - மிக்கோர்க்கு
ஒரு வாழ்வு ஆனோனை உபந்திரனே என்றும்
திருமலை ஆண்டானைத் தேவ - குரு என்றும்
நண்ணிய சீர்பெற்ற நம்பி முதலியோரை
விண்ணவர்கோன் ஆதி விபுதர் என்றும் - எண்ணுதலால்
ஆர்பதியான அமராபதி போலும்
சீர் பதியான திருப்பதியான் -

பொருள் :

தங்கமாகிய (திருமாலிருஞ் தேசாலையின் கோயிலில் உள்ள) சந்திர வடிவத்தை உடைய சோமசுந்தர விமானத்தைக் காணுகின்றவர்கள் இது இந்திர விமானமே என்பர். மந்திரங்கள் ஒலிக்க கொடி ஏற்றப்படுகின்ற கோயிலின் கொடிமரத்தைக் காணுகின்றவர்கள் காம வல்லிக் கொடி படர்ந்த கற்பக மரமே என்றும், (அக்கோயிலில் உள்ள) உயர்ந்தவர்களுக்கு ஒரு வாழ்வாக அமைந்த அழகனை உபேந்திரன் என்றும், திருமலை ஆண்டானைத் தேவகுரு என்றும் (பிரகஸ்பதி), கோயிலைச் சேர்ந்து கோயில் திருப்பணிகளைச் செய்கின்ற திருமலை நம்பி முதலானோரை தலைவனாம் இந்திரனைக் கொண்ட தேவர்குழாம் என்றும் மனதில் எண்ணும்படி அழகு நிறைந்த பதியாக, அமராவதி நகரைப் போன்ற பெருஞ்சிறப்புக் கொண்ட திருமாலிருஞ்சோலை என்ற ஊரினை உடையவன்.

சொ.பொ.வி:

மந்த்ரவிருது - மந்திரங்கள் ஒலிக்க, துசத்தம்பம் - கொடிமரம், வல்லி - தேவர் உலகில் உள்ள காமவல்லிக் கொடி,

Koviloor Digital Library

கற்பகத்தாரு - கற்பகமரம், திருமலை ஆண்டான் - இராமானுசரின் குரு. நம்பி - திருமலை நம்பி (இவர் கோயில் பணியாளர்களில் முதன்மை பெற்றவர்)

மாலை (112வது கண்ணி)

- மார்பிடத்தில்
எண்ணும் கலன் நிறத்தோடும் இந்திரவில்போல் பசந்த
வண்ணம் தரும் துளப மாலையான் -

பொருள் :

மார்பாகிய இடத்தில் காட்சி தருகின்ற எண்ணித் துதிக்கப்படுகின்ற அணிகலன்களின் நிறத்தோடு கலந்து இந்திரவில்லைப் போலக் (வானவில்) காட்சி அளிக்கின்ற பச்சை நிறத்தை மிகுதியாகக் காட்டுகின்ற துளசிமாலையை உடையவன்.

யானை (113-116 கண்ணிகள்)

- உள்நின்று
உருக்கும் வயிணவமாம் ஓங்கும் மதம் பொங்கத்
திருக்கொம்புதான் துதிக்கை சேர - நெருங்கிய
பாகம் ஒத்த வைகானதம் பாஞ்சராத்திரமாம்
ஆகமத்தின் ஓசை மணி ஆர்ப்பெடுப்ப - மோகம்அறு
மட்டும் பிணிக்கும் வடகலையும்தென்கலையும்
கட்டும் புரசைக் கயிறாக - விட்டுவிடா
ஆனந்தமான மலர்த்தாள் கண்ட அத்துவி(த)
ஆனந்தம் என்ற களியானையான் -

பொருள் :

அடியவர் மனத்தில் உள்நின்று உயிரை உருக்கும் வைணவம் என்னும் மதமே தன்னுடைய மதநீராகப்

Koviloor Digital Library

பெருகவும், திருமகளாகிய பூங்கொம்பே தன் துதிக்கை யாகச் சேரவும், நெருங்கிய பகுதிகள் ஒத்திருக்கின்ற (கருத்துக்கள்) வைகானதம், பாஞ்சராத்திரம் என்ற ஆகமங்களின் ஒலியே தன் இருபக்க மணியோசையாக ஒலிக்கவும், ஆசை நீங்கும் வரை கட்டப்படுகின்ற வடகலை, தென்கலை என்பவை கட்டப்படுகின்ற (மணிகள்) கயிறுகளாகளவும் கொண்டு விளங்குகின்ற, என்றைக்கும் நீங்காது இருக்கின்ற, ஆனந்த மயமான தாமரை போன்ற திருமாலின் பாதங்களைக் கண்ட அத்துவிதம் என்ற யானையை உடையவன்.

சொ.பொ.வி:

திருக்கொம்பு - திருமகளாகிய பூங்கொம்பு, நெருங்கிய பாகம் - நெருங்கிய பகுதிகள், மோகம் - ஆசை, பிணைக்கும் - கட்டும், புரசைக் கயிறு - யானையின் மணிகள் கட்டப்படுகின்ற கயிறு, களி யானை - மதங்கொண்ட யானை.

குதிரை (117-119 கண்ணிகள்)

- தான்அந்த
வர்க்கத்துடன் எழுந்து வாயி னுரைகடந்து
கற்கி வடிவு நலம் காண்பித்துச் - சொர்க்கத்தில்
ஏறும் கதி காட்டி எய்தும் அணுத் தோற்றி
வீறும் பலகலையும் வென்றுஓடி - ஆறு அங்கம்
சாற்றிய தன் அங்கமாய்க் கொண்டு தாரணியில்
போற்றிய வேதப் புரவியான் -

பொருள் :

அழகான சேணம், கடிவாளம் ஆகியவற்றை அணிந்து, ஆற்றலுடன் பாய்ந்து நுரை கக்கி, தன் குதிரை

Koviloor Digital Library

வடிவத்தை அனைவருக்கும் அறியக் காட்டி, போரில் எதிர்த்தவர் சொர்க்க லோகம் செல்ல வழிகாட்டி, எங்கும் தூசிகளை உண்டாக்கி, பல மான்களின் ஓட்டத்தை வென்று விரைந்து சென்று ஓடி, ஆறு உறுப்புக்களைப் போர்செய்யும் உறுப்புக்களாகக் கொண்டு, உலகில் முன்னணிப் படையாகப் போற்றப் பெறுகின்ற வேதக் குதிரையை உடையவன்.

சொ.பொ.வி:

அந்தவர்க்கம் - சேணம், கடிவாளம் உள்ளிட்ட உறுப் புக்கள், கற்கி - குதிரை, கதி - வழி, அணு - தூசி, கலை - மான், ஆறு அங்கம் - நான்கு கால், வால், வாய், தாரணியில் - உலகில்.

கொடி (120, 121 கண்ணிகள்)

- பாற்கடலில்
புக்கதுஒரு மந்தரமும் பூமியும் பம்பரமும்
சக்கரமும் போலத் தலைகழன்று - தொக்க விசை
வற்றும் பொழுது விழ வாசுகியைச் சேடனைப்
பற்றும் கருடப் பதாகையான் -

பொருள் :

முன் காலத்தில் பாற்கடலைக் கடைவதற்காக முற்பட்ட பொழுது அக்கடலில் சேர்ந்த இமயமலையும் பூமியும் (பம்பரமும் சக்கரமும் போல) தலை சுழன்று, வேகம் குறைந்த பொழுது வீழ்ந்த வாசுகியையும், ஆதிசேடனையும் வாயால் கௌவிக்கொண்டு போகும் வலிமை வாய்ந்த கருடக் கொடியை உடையவன்.

Koviloor Digital Library

சொ.பொ.வி:

திருப்பாற்கடலில் சேர்ந்த இமயமலைக்கும் பூமிக்கும் பம்பரமும் சக்கரமும் உவமையாயின. இமயமலை சுழல்வதற்குத் தலை மட்டும் சுழல்கின்ற பம்பரச் சுழற்சி உவமையாயிற்று. பூமி சுழல்வதற்குக் கீழ்மேல் சுழல்கின்ற சக்கரச் சுழற்சி உவமையாயிற்று. வாசுகி - இமயமலையைச் சுழற்றுவதற்குக் கட்டப்பட்ட கயிறு வாசுகி என்ற பாம்பாகும். சேடன் - பூமியைத் தாங்கியது ஆதிசேடன் என்ற பாம்பாகும். (இவ்விரண்டும் மலையின் சுழற்சி தாழ்ந்தபோது வீழ்ந்தன. இவ்விரண்டையும் கவ்விய சிறப்புடையது கருடன்)

முரசு (122)

- சுற்றியதன்
குன்றில் அரியும் கரியும் கொண்மூவும் நின்று அதிர
மூன்றில் அதிர் மும்முரசினான் -

பொருள் :

சூழ்ந்திருக்கும் திருமாலிருஞ்சோலையாகிய தன் மலையில் சிங்கமும், யானையும், மேகமும் ஆரவாரம் செய்வதால் தன் கோயிலின் முற்றத்தில் எப்பொழுதும் விளங்குகின்ற அந்த மூன்று முரசங்களை உடையவன்.

சொ.பொ.வி:

அரி - சிங்கம், கரி - யானை, கொண்மூ - மேகம், மும்முரசு - சிங்கஒலி போல் ஒலிக்கும் வீரமுரசு, யானை ஒலி

Koviloor Digital Library

போல் ஒலிக்கும் நியாயமுரசு, மேகம் போல் ஒலிக்கும் கொடை முரசு.

ஆணை (123)

- என்றும்
அவன் அசையாமல் அணு அசையாது என்னும்
தவநிலை ஆணை தரித்தோன் -

பொருள் :

என்றும் அவன் அசையாமல் ஓர் அணுவும் அசையாது என்ற பழமொழிப்படி தவத்தால் நிலை பெற்ற ஆணையை உடையவன்.

திருமாலின் பெருமைகள் (124-132 கண்ணிகள்)

- நவநீதம்
மேனியில் சிந்தியதும் மென்கையில் ஏந்தியதும்
வானில் உடுவும் மதியும்எனத் - தான் உண்டோன்
செங்கதிரும் வெண்கதிரும் என்னத் திருவிழியும்
சங்கமும் சக்கரமும் தாங்கினோன் - அங்கணுலகு
உண்ட கனிவாயான் உறையும் திருவயிற்றான்
கொண்டபடி ஈன்ற கொப்பூழான் - பூமி
அளந்த திருத்தாளான் அன்று ஏற்ற கையான்
விளைந்த பொருள்காட்டும் மெய்யான் - உளம்கொண்டு
இடந்த மருப்பினான் ஏந்து முதுகான்
படந்தனில் வைத்த மணிப்பாயான் - தொடர்ந்தவினை
முட்டுஅறுக்கும் தன்நாமம் உன்னித் திருநாமம்
இட்டவருக்கு ஈவோன் இகபரங்கள் - எட்டு எழுத்தால்
பிஞ்செழுத்தாம் நையும் பிரமலிபி என்னும் பேர்

Koviloor Digital Library

அஞ்சு எழுத்தை மூன்று எழுத்துஆக்குவோன் - வஞ்சம் அறத்
தங்கள் குன்று எங்கிருந்தும் சங்கரன் ஆகியோர்
நங்கள் குன்று ஈது என்னவரு நண்புடையோன் - அங்கு ஓர்
வயமுனிக்குக் கண் இரண்டும் மாற்றினோன் போற்றும்
கயமுனிக்குக் கண்கொடுத்த கண்ணன் -

பொருள் :

(திருமாலின் சிறப்புக்களைக் கூறுகின்ற தலைவி பத்து உறுப்புக்களைக் கூறிய பின் மீண்டும் திருமாலின் பெருமைகளைக் கூறுகின்றாள். அதில் முதலில் உருவம் கூறப் பெறுகின்றது) வெண்ணையை உண்டபோது உடம்பில் தெரித்த வெண்ணெய்த் துளிகளும், கையில் ஏந்திய வெண்ணெய் உருண்டையும், வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களும், நிலவும் போலத் தோன்றும் படி உண்டவன். செம்மைநிறக் கதிரவனும், வெண்மைச் சந்திரனும் போல இரண்டு விழிகளையும், சங்கு சக்கரத்தையும் தாங்கியவன்.

உலகத்தை உண்ட சிவந்த கனிபோன்ற வாயை உடையவன். உண்ட உலகங்கள் தங்கியிருக்கும் வயிற்றை உடையவன். உண்ட உலகங்களை மீண்டும் ஈன்ற திரு உந்தியை உடையவன். உலகங்களை அளந்த பாதங்களை உடையவன். முன் ஒரு காலத்தில் (மாவலிச் சக்கரவர்த்தியிடம்) மூன்றடி மண் வேண்டுமென்று கேட்டு ஏற்றுக் கொண்ட கையை உடையவன். விளை கின்ற பச்சைப் பயிர்களின் வடிவம் போன்ற மேனியை உடையவன்.

உள்ளத்தில் நினைந்து (அரக்கன் கடலில் அமுத்திய உலகத்தை) பெயர்த்து எடுத்த கொம்பினை உடையவன்.

Koviloor Digital Library

(கூர்ம அவதாரத்தில் உலகை) சுமந்த முதுகினை உடையவன். உலகத்தைத் தாங்கிய ஆதிசேடன் என்னும் பாம்பைப் பாயாக உடையவன் (என்று திருமாலின் உடம்பைப் பற்றிக் கூறிய பின் மீண்டும் அவன் பெருமைகளைக் கூறுகின்றாள்)

தொடர்ந்து வருகின்ற வினைகளைத் தொலைக்கத் தன்னுடைய நாமத்தை நினைந்து நெற்றியல் திருநாமம் இட்டவர்க்கு இம்மை மறுமை இன்பங்களைத் தரு பவன். எட்டெழுத்துக்களால் (ஓம் நமோ நாராயணாய என்ற எழுத்துக்களைக் கூறுவதால்) சிறிய எழுத்தாய் குறையும் பிரமலிபி என்ற (தலையில் பிரமன் எழுதிய எழுத்து) பெயரை உடைய அஞ்செழுத்தையும், இல்லை என்ற மூன்றெழுத்தாக்கும் வன்மை உடையவன்.

வஞ்சம் இல்லாது தங்களுடைய மலை எங்கிருந் தாலும் சங்கரன் முதலியோர் தங்கள் மலையை விட்டு விட்டு நம்முடைய மலை இதுதான் (திருமாலிருஞ் சோலை) என்று வந்து தங்குகின்ற நட்பினை உடையவன். வன்மையான முனிவருக்கு இரண்டு கண்களைக் கெடுத்துப் பிறகு கொடுத்தவன். தன்னை வழிபட்ட ஒரு யானைக் குட்டிக்குக் கண்கொடுத்த கண்ணன் என்ற பெயரை உடையவன்.

சொ.பொ.வி:

நவநீதம் - வெண்ணெய், உடு - நட்சத்திரம், மதி - சந்திரன், மருப்பு - தந்தம், இகபரங்கள் - இம்மை மறுமை இன்பங்கள்.

Koviloor Digital Library

புராண விளக்கங்கள் :

***124வது கண்ணி** - ஆயர்பாடியில் கண்ணன் வீடுகள் தோறும் சென்று உரியில் வைத்த வெண்ணெயைத் திருடியபோது மேனியில் வெண்ணெய்த் துளிகள் சிந்தவும், கையில் வெண்ணெய் உருண்டை இருக்கவும் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டான்.*

***127வது கண்ணி** - திரிவிக்கிரம அவதாரத்தில் (குறு முனி அவதாரம்) மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி கேட்டு, இரண்டடியால் உலகம், விண்ணகம் இவற்றை அளந்து மூன்றாவது அடிக்கு இடம் ஏது என்ற கேட்டதாக வரலாறு.*

***128வது கண்ணி :** இரண்யாட்சன் என்ற அரக்கன் உலகத்தைக் கடலில் மறைத்த பொழுது, தேவர்கள் வேண்ட திருமால் கூர்ம(பன்றி) அவதாரம் எடுத்துக் கடலில் அமிழ்ந்திருந்த உலகைத் தன் கொம்புகளால் மீட்டுக் கொண்டு வந்தார் என்பது வரலாறு.*

***132வது கண்ணி :** வயமுனி என்பது பச்சை வாரண தாசனைக் குறிக்கும். இவர் திருக்கச்சி நம்பியின் முன்னோர்களில் ஒருவர். அத்திரி என்னும் தலத்தில் இவரின் கண்கள் கெட்டன. பின் திருமாலின் அருளால் அழகர் மலையில் இவருக்குக் கண் கிடைத்தது. சிறிய யானைக் கன்றுக்குக் கண் கொடுத்ததாகத் தலவரலாறு கூறுகின்றது.*

Koviloor Digital Library

(133-139 கண்ணிகள் வரை)

- நயம் உரைக்கின்
அஞ்சுபடையோன் எனினும் அஞ்சாமல் அங்கையில் வா
சம்செய்யும் உத்யோகச் சக்கரத்தான் - எஞ்சாது
விண்நிலம்கொள் பொன்இலங்கை வெற்றியாய்க் கொண்டாலும்
மண்ணில் அங்கைத் தானமாய் வாங்குவேன் - பண் இலங்கும்
ஏர்அணி பொன் அரங்கத்து எம்பிரான் போல் எவர்க்கும்
தார்அணி நல்காத தம்பிரான் - கார்அணியும்
செய்கைத் தலத்து இடத்தும் தென்மதுரை ஊர்இடத்தும்
சங்கத்து அழகன் எனும் தம்பிரான் - எங்கும்
திருப்பாது உகைக்கும் செழும் கருடனுக்கும்
திருபாதுகைக்கும் அரசு ஈந்தோன் - விருப்பமுகம்
சந்திரன் ஆன சவுந்திரவல்லி உடன்
சுந்தரராசன் எனத் தோன்றினேன் - அந்தம்
சொல நலங்கொள் தோள் அழகால் சுந்தரத் தோளான்
மலை அலங்காரன் என வந்தோன்-

பொருள் :

நயந் தோன்ற நன்றாகச் சொன்னால் அவன் ஐந்து படைகளை உடையவன். என்றாலும் அடியவர்களை அஞ்சாமல் இருக்கச் செய்யத் தன் கையில் உத்யோகச் சக்கரத்தை மட்டும் உடையவன். எதுவும் மிஞ்சாமல் விண்ணையும் நிலத்தையும் கவர்ந்து கொண்ட அகன்ற பொன்மயமாகிய இலங்கையைத் தன் உரிமையாக்கிக் கொண்டவனாக இருந்தும் மண்ணாகிய பூமியைக் கையேந்தித் தானமாக ஏற்றுக் கொண்டவன்.

இசை விளங்கும் திருவரங்கத்து எம்பிரான் போல் எவர்க்கும் தன்னுடைய மலர்மாலையை வழங்காதவன்.

Koviloor Digital Library

கொடையில் மேகத்தை ஒத்த தன்னுடைய சிவந்த கைத் தலத்திலும், தென்மதுரை என்ற ஊரிடத்திலும் சங்கத்து அழகன் என்று கூறுகின்ற சிறப்பினை உடையவன். எந்த இடத்தும் திரும்பாமல் தானே செல்லுகின்ற கருட னுக்கும், தன்னுடைய பாதுகைக்கும் அரசு கொடுத்தவன்.

விருப்பத்தைத் தரும் முகமானது சந்திரனாக விளங்கும்படி சவுந்தரவல்லியுடன் சுந்தரராசன் எனத் திருப்பெயர் கொண்டு காட்சி அளிப்பவன். அழகு என்பது இதுவே என்று வியந்து சொல்லும்படி நலம் நிறைந்த தோளாலும், அழகாலும் சுந்தரத் தோழன் என்றும், மலை அலங்காரன் என்றும் கூறுகின்ற அளவிற்குத் தோன்றியவன்.

சொ.பொ.வி :

உத்யோகச் சக்கரம் - திருமால் கையில் இருக்கும் காத்தல் தொழிலுக்குரிய அடையாளச் சக்கரம், ஏர் - அழகு, பொன்ன ரங்கம் - திருவரங்கம், தாரணி - மாலை, சங்கத்து அழகன் - கையில் சங்கத்தைத் தாங்கியவன் என்றும், தென்மதுரையில் உள்ள தமிழ்ச் சங்கத்தில் இருப்பவன் என்பதும் குறிப்பு, திரும்பாது - தானே செல்லும் தகுதி, பாதுகை - திருவடி.

புராண விளக்கம் :

137வது கண்ணி – தன் மேல் அமர்ந்திருந்து செலுத்து கின்ற திருமால் ஏறியதும், செல்லுமிடத்தை அறிந்து அவர் கருத்துக்கு ஏற்ப, அவர் செலுத்தாமலே செல்லு கின்ற கருடனுக்கும், இராமாவதாரத்தில் தான் ஆட்சி புரிய இராமனின் அடையாளமாக அரியணையில்

Koviloor Digital Library

வைத்துப் பரதன் அரசாட்சி புரிந்த பாதுகைக்கும் திருமால் பெருமை அளித்தார்.

திருமாலின் அருள்பெற்றவர்கள் (140-142)

- பலவிதமாய்
நண்ணிய தெய்வத்தை நரர் எல்லாம் பூசித்த
புண்ணியமே தன்னைவந்து பூசித்தேன் - கண் அனைய
பாத கமலம் பரவு மலயத்துவசன்
பாதக மலம் பறித்திடுவோன் - கோதுஇல்
அரணாம் புயங்கள் உறும் அம்பரீடற்குச்
சரளா அம்புயங்கள் தருவோன் -

பொருள்:

பலவிதமாகப் பொருந்திய தெய்வங்களை மனிதர்கள் எல்லாம் வழிபட்டால் கிடைக்கின்ற புண்ணியம் தருமதேவதை வடிவாக அழகர் மலைக்கு வந்து வழிபட நின்றவன். (அருளியவன்) வழிபடுபவர்களுக்குக் கண்ணைப் போன்று காட்சி தருகின்ற திருவடிகளாகிய தாமரை மலர்களை வழிபட்ட மலையத்துவச பாண்டியனின் பாவங்களாகிய மும்மலங்களை நீக்கியவன். குற்றமில்லாத மக்களைக் காக்கின்ற தோள்களைக் கொண்ட அம்பரீடன் என்ற அரசன் தன்னைச் சரணாகதி அடைந்த பொழுது அவனுக்குத் தன்னுடைய பாத கமலங்களை அளித்தவன்.

சொ.பொ.வி:

நரர் - மனிதர், பாதகமலம் - பாவமாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள், அரணாம் புயங்கள் -

Koviloor Digital Library

பாதுகாக்கும் தோள்கள், சரளா அம்புயங்கள் - சரணடைந்த தாமரைகள் (திருவடிகள்)

சித்திரைத் திருவிழா (143-165 கண்ணிகள்)

பாட்டுடைத் தலைவி திருமாலின் பெருமைகளைக் கூறி வந்தவள் அழகர்க்குரிய திருவிழாக்களில் கோடைத் திருவிழாவாகிய சித்திரைத் திருவிழாவின் நடை முறையைக் கூறி, அத்திருவிழாவில் எழுந்தருளிய அழகரைத் தான் கண்டு காதலித்த நிகழ்வை இனிக் குறிப்பிடுகிறாள்.

(143-147 கண்ணிகள்)

- திருநாளில்
சந்தக்கா ஊடு தவழ்ந்து வரும் தென்றல்கால்
மந்தக் காலாக மருவும்கால் - சிந்திக்கும்
வாடைத் துளிபோல் மலர்த்தேன்துளி துளிக்கும்
கோடைத் திருவிழாக் கொண்டருளி - நீடுவிடைக்
குன்றில் உற்ற வெள்ளம் கொழுந்து ஓடி வையைதனில்
சென்று எதிர்த்து நிற்பதுஎனச் சீபதியோர் - அன்றுஎதிர்த்துக்
கூடலின் கூடல்என்னும் கூடல் திருநகரில்
ஏடு அலர் தாரான் எழுந்து அருளி - ஆடலுடன்
கல்லாகு உளங்கள் கரையப் பணிவார்முன்
தல்லாகுளம் வந்து சார்ந்து அருளி -

பொருள் :

அழகர்க்குரிய திருவிழாக்களில் சித்திரைத் திரு நாளில் சந்தனச் சோலையின் நடுவில் தவழ்ந்து வரும் தென்றல் காற்று மென்மையான காற்றாக வீசும்.

Koviloor Digital Library

அப்பொழுது காதலனை நினைக்கும் வாடைக்காற்றுச் சுமந்து வரும் பனித்துளிகளைப் போலச் சந்தனச் சோலையில் உள்ள தேன்துளிகளைத் தென்றல் காற்று தெளிக்கும். அத்தகைய கோடைத் திருவிழாவை ஏற்று, இடபமலை என்ற சோலைமலையில் ஓடிவரும் வெள்ள மானது விரைந்து சென்று வையை ஆற்றில் எதிர்த்து நிற்பது போல, அழகர் மலை வாழ்வோர் அந்நாளில் யாவரும் கூடுகின்ற காரணத்தால் கூடல் என்ற பெயர் பெற்ற சிறந்த நகரத்தில், இதழ் விரிந்த மாலையைக் கொண்ட அழகர் எழுந்தருளி, பிறகு ஆடிக் கொண்டு கல்போன்ற மனங்களும் கயையும்படி பக்தி செலுத்து வோருக்கு முன்னே தல்லாகுளம் என்னும் இடத்திற்கு வந்தருளி-

சொ.பொ.வி:

சந்தக்கா - சந்தனக்காடு, தென்றல்கால் - தென்றல்காற்று, மந்தக்கால் - மென்மையான காற்று, விடைக்குன்று - இடபமலை, சீபதி - அழகர்மலை, ஏடுஅலர் - இதழ்விரிந்த மலர்மாலை, கல்ஆகும் - கல்போன்ற.

(148-160 கண்ணிகள்)

- மெல்ல

நரலோகம் மீது நடந்து வருகின்ற
பரலோகம் என்று சிலர் பார்க்கச் - சுரலோகத்து
இந்த்ர விமானம் இது என்றும் இது சோமச்
சந்த்ர விமானமே தான் என்றும் - முந்திய அட்ட
ஆங்க விமானம் அவை இரண்டும் என்னவே
தாங்கு விமானம் தனில் புகுமுன் - தீங்கிலார்

Koviloor Digital Library

உன்னி விமானம் உரத்து எடுக்கும்போது அனந்தன்
சென்னிமணி ஒன்று தெரித்து எழுந்தது - என்னவே
உம்பரில் வெய்யோன் உதயம் செயக் குதிரை
நம்பிரான் ஏறிநடந்துஅருளி - அம்பரத்தில்
கோடி கதிரோனும் கோடி பனிமதியும்
ஓடிநிரையா உதித்த என - நீடிய
பொன்கொடியும் வெள்ளிக் குடையும் பொலிந்து இலங்க
வில் கொடிகள் விண்ணோர் வியர் துடைப்பச் - சொற்கத்து
இயலும் கரியும் அதில்ஏற்று முரசும்
புயலும் உருமேறும் போலக் - கயலினத்தை
அள்ளும்திரை வையை ஆறுள் பரந்து நர
வெள்ளம் கரைகடந்து மீதுற - வள்ளல்
திருத்தகு மேகம் போல் செல்லுதலால் நீர்தூம்
துருத்தி மழைபோல் சொரியக் - கருத்துடனே
வாட்டமற வந்தவரம் கேட்கும் அன்பருக்குக்
கேட்டவரம் ஊறும் கிணறுபோல் - நாட்டமுடன்
காணிக்கை வாங்கி அன்பர் கைகோடி அள்ளியிடும்
ஆணிப்பொன் கொப்பரை முன்னாக வர - காணில்
புரந்தரர்க்கு நேரிது என்று போற்றியிசைப்ப ஓரா
யிரம் திருக்கண் வையை நதிஎய்தி -

பொருள்:

மக்கள் வாழும் பூமியின் மீது மெல்ல நடந்து வருகின்ற விண்ணவர் உலகம் இதுவோ என்று சிலர் பார்க்க, (தல்லாகுளத்திற்கு வந்த அழகர் தங்க விமானத்தில் ஏறுகின்றார். அந்த விமானம் பற்றிய செய்தி இங்கு கூறப்படுகிறது.) தேவர் உலகில் உள்ள இந்திரவிமானம் இது என்றும், சோமசந்தர விமானமே இது என்றும் பழமையான எட்டு அங்கங்களை உடைய

Koviloor Digital Library

இவ்விரண்டு விமானங்களும் வருகின்றன என்றும் கூறும்படித் தன்னைத் தாங்குகின்ற விமானத்தில் அழகர் ஏறி (சிறிது தொலைவு) சென்றார். அவர் ஏறிய விமானத்தைக் குற்றமற்ற அடியார்கள் அழகரைத் தன் மனதில் எண்ணி விமானத்தை வலிமையுடன் தூக்கும் பொழுது (பூமி அதிர்ந்திட அதனைத் தாங்கிய) ஆதி சேடன் அசைய, அவன் தலையில் உள்ள மாணிக்கங் களுள் ஒன்று தெரித்து விழுந்தது போல, விண்ணகத்தில் கதிரவன் உதயம் செய்ய, அந்த நேரத்தில் அழகர் விமானத்தை விட்டு இறங்கிக் குதிரையில் ஏறிட, வானத்தில் கோடிச் சூரியர்களும், கோடி நிலவுகளும் நிறைந்து ஓடிவந்து வரிசையாக உதித்ததுபோல, நீண்ட பொன்னிறக் கொடிகளும், வெள்ளிக் குடைகளும் பொலிவுடன் விளங்கின.

ஒளி பொருந்திய அந்தக் கொடிகள் உயர்ந்து தேவர் களின் வியர்வையைத் துடைப்பது போல அசைய, சொர்க்கத்தில் செல்லுகின்ற யானையைப்போல மேகங்களும் அவைகளின் முதுகில் ஏற்றி முழக்கும் முரசுகள் போல இடிகளும் ஒலிக்க, கயல் மீன்களை அள்ளி வீசும் அலைகளை உடைய வையை ஆற்றினுள் பெரிய மக்கள் கூட்டம் அளவு கடந்து செல்ல, வள்ளலாம் அழகர் அழகிய மேகம் போல் வையை ஆற்றில் இறங்கிச் செல்லும் பொழுது நீரைத் தெளிக்கும் துருத்திகள் மழைபோல் நீரைச் சொரிந்தன. அழகரின் அருளைப் பெறும் கருத்துடன் தங்களுடைய துயரை நீக்கிக் கொள்ள அங்கு வந்து வரம் கேட்கும் அன்பர் களுக்கு எல்லாம் கேட்ட வரங்களை ஊற்றுக் கிணறு

Koviloor Digital Library

போல அழகர் தந்திடுவார் என்பதால் - விருப்பத்துடன் அன்பர்கள் காணிக்கைகளைக் கோடிக்கணக்கில் தம் கைகளால் இடுகின்ற ஆனிப் பொன்னால் ஆன உண்டியலாம் கொப்பரைகள் இறைவனுக்கு முன்னே ஊர்வலத்தில் வர, நினைந்து பார்த்தால் இந்திரனின் உடம்பில் உள்ள கண்களுக்கு நிகரானவை என்று புகழும் வண்ணம் அமைந்த ஆயிரக்கணக்கான திருக்கண் மண்டபங்களில் எழுந்தருளிப் பின், வையைக் கடந்து (சென்றார்)

சொ.பொ.வி :

நரலோகம் - பூமி, பரலோகம் - பொன் உலகம், சுரலோகம் - தேவர் உலகம், (பொன் உலகம் என்றும், இந்திர விமானம் என்றும், சோமசந்தர விமானம் என்றும் எண்ணும்படியான விமானத்தில் அழகர் ஏறிச் சென்றார் என்ற செய்தி முதல் மூன்று கண்ணிகளில் கூறப்படுகின்றது) அனந்தன் - ஆதிசேடன், சென்னி - தலை, உம்பர் - வானத்தில், வெய்யோன் - சூரியன், நம்பிரான் - அழகர், சொற்கத்து - வானுலகத்து, கயல் - கயல்மீன், புரந்தரன் - இந்திரன்.

(161-165 கண்ணிகள்)

- உரம் தரித்த
வார்மண்டு கொங்கை மனம்போல் விலங்குவண்டி
யூர்மண்டபத்தில் உவந்திருந்து - சீர்மண்டு
மாயனுக்கு வாகனமாய் வாஎன்று சேடனைத்தான்
போயழைக்க வெய்யோன் புகுந்திடலும் - தூயோன்
மருளப் பகலை மறைத்தவன் இப்போது
இருளைப் பகல் செய்தான் என்னத் - தெருளவே

Koviloor Digital Library

அங்கிக் கடவுளும் வந்து அன்பருடன் ஆடுதல்போல்
திங்கள் கடவுளும் சேவிப்பதுபோல் - கங்குல்
கரதீபமும் வானக் காட்சியும் காண
வர தீபரூபமாய் ந்த - திருமால்

பொருள்:

(வையையைக் கடந்து சென்ற அழகர்) தன் மார்பின் மீது தங்கியுள்ள கச்சணிந்த முலைகளைக் கொண்ட திருமகள் விருப்பம் போல் அமைந்திருக்கும் மதுரை நகரை விட்டு விலகியிருக்கும் வண்டியூர் மண்டபத்தில் மகிழ்வுடன் வீற்றிருந்தார். அபபிபொழுது பெருமை பொருந்திய திருமாலுக்கு வாகனமாக வா என்று ஆதிசேடனை அன்பர்கள் அழைக்க, அந்த நேரத்தில் சூரியன் மறைந்தான். (இருளும் வந்தது)

தூயவனாகிய திருமால் யாவரும் மயங்கும் வண்ணம் (இருள் வர) பகலை மறைத்தான். (பிறகு) இருளைப் பகல்போல் ஆக்கினான் என்று கூறும் படியாகத் தீக்கடவுள் அடியார்களுடன் வந்து கூடி விளையாடுவது போலவும், சந்திரனாகிய தெய்வம் வந்து வணங்குவது போலவும் அந்த இரவில், கைத் தீவட்டிகளும், வான வேடிக்கைக் காட்சியும் அடியவர்கள் கண்டு மகிழும் வண்ணம் தோன்றின. அவற்றைத் தானும் காண ஒளி வடிவாய் வந்தார். (ஒரு முறை திருத்தங்கல் என்ற திருத்தலத்தில் ஒளி வடிவமாய் வந்தாராம் பெருமாள்.) வந்தவரைத் தலைவி கண்டாள்.

Koviloor Digital Library

சொ.பொ.வி:

உரம் - மார்பு, வார் - பெண்கள் அணியும் கச்சு, மாயன் - அழகர், சேடன் - ஆதிசேடன், அங்கி - தீ, கங்குல் - இரவு. கரதீபம் - கைத்தீவட்டி, வாணக்காட்சி - வானவேடிக்கைக் காட்சி, தீபரூபம் - ஒளி வடிவம்.

தலைவியின் காதல். (166-184 கண்ணிகள்)

அவனிபரிக்கும் அனந்தாழ்வான் மீது
பவனி வரக்கண்டு பணிந்தேன் - அவன்அழகில்
பின்னழகு முன்னழகாம் பேரழகைக் காணுமுன்னே
முன்னழகைக் கண்டே நான் மோகித்தேன் - பின்னழகு
தானே கண்டாலும் தனக்குத் துயர்வரும் என்று ஏனோரை
நோக்கி எழுந்து அருள - ஆனோன்
விமலத் திருமுகமும் மென்மார்பில் மேவும்
கமலத் திருமுகமும் கண்டேன் - அமலன்
அரவணையான் என்பதும் உண்டு அண்ணல் அரன்போல
இரவு அணையான் என்பதும் உண்டு எனும் - பரவைத்
திருஅணையான் என்று தினம் செப்புவது பொய்யென்று
உருவணையும் மாதர்க்கு உரைத்தேன் - மருஅணையும்
செங்கரத்தில் அன்று திருடிய வெண்ணெய் போலச்
சங்கிருக்க என்சங்கும் தான் கொண்டீர் - கொங்கை
மலையருவி நீர்உமக்கு மாலிருஞ்சோலைத்
தலையருவி நீர்தானோ சாற்றீர் - விலையிலா
பொற்கலை ஒன்று இருந்தால் போதாதோ அன்றுபுனை
வற்கலையிலே வெறுப்பு வந்ததோ - நற்கலைதான்
ஆரம்சேர் கொங்கைக்கு அளித்தது அறியீரோ
சோரம் திரும்பத் தொடுத்தீரோ - ஈரம்சேர்
நூலாடையாம் எங்கள் நுண்ஆடைதாம் உமக்குப்
பாலாடை ஆமோ பகருவீர் - மாலாகி

Koviloor Digital Library

மொய்த்து இரையும் எங்கள் மொழிகேளீர் பாற்கடலில்
நித்திரைதான் வேகவதி நீரில் உண்டோ - இத்தரையில்
பொங்கு நிலா வெள்ளம் பொருந்திற்றோ பாற்கடல்தான்
அங்கு நிலாது உம்மோடு அணைந்ததோ - கங்குல்எனும்
ஆனை கெசேந்திரன் ஆகில் அதன்மேல் வருவன்
மீனையும் விட்டு விடலாமோ - கானச்
சதிர் இளமாதர் தமக்கு இரங்குவீர் நெஞ்சு
அதிர் இளமாதர்க்கு இரங்க ஒணாதோ - முதிர்கன்றைக்
கொட்டத்து வெண்பால் குனிந்து கறப்பார் முலையில்
விட்டுக் கறப்பதையும் விட்டீரோ - கிட்டப்போய்
மென்பால் தெறித்த வியன்முலையைப் பாற்குடம் என்று
அன்பால் எடுத்தது அறியீரோ - மின்போல்வார்
செவ்விதழின் மேலே தெறித்த வெண்ணெய் உண்பதுபோல்
அவ்விதழை உண்டது அயர்த்தீரோ - செவ்விதழை
குன்று அன்று எடுத்தீர் குளிரும் அமுதம் கடைந்தீர்
சென்று அன்று பாம்பின் நடம் செய்தீரே.

பொருள்:

ஆதிசேடன் மீது (திருமால்) பவனி வரக் கண்டு அவரை வணங்கினேன். அவருடைய பின்னழகும் முன்னழகும் ஆகிய பேரழகு முழுமையும் பார்ப்பதற்கு முன்னே, முன்னழகைக் கண்டவுடனே காதல் கொண்டேன். பின்னழகைக் கண்டால் எனக்குத் துன்பம் மிகும் எனப் பிறரை நோக்கி அவன் எழுந்தருள, அவனுடைய குற்றம் இல்லாத திருமுகத்தையும் அவன் மார்பில் வாழ்கின்ற தாமரைப் பூ போன்ற திருமகளின் முகத்தையும் பார்த்தேன். "குற்றமற்ற திருமால் பாம்புப் படுக்கை உடையவன் என்று சொல்லுவதுண்டு. அண்ணலாம் சிவபெருமான் போல இவன் யாசிக்கும்

Koviloor Digital Library

தொழில் செய்யாதவன் என்று கூறுவதுமுண்டு. (அவையெல்லாம் உண்மை) என்றாலும் அவன் கடலில் தோன்றிய திருமகளை நாள்தோறும் அணைப்பதில்லை என்று கூறுவது பொய்'' என்று அழகு வடிவம் கொண்ட மங்கையரிடம் கூறினேன்.

மணம் பொருந்திய அவனுடைய கையில் - கண்ணனாய்ப் பிறந்த பொழுது திருடிய வெண்ணெய் போலச் சங்கு இருக்கும் பொழுது, என் கைகளில் அணிந்த சங்கு வளையல்களை ஏன் கவர்ந்து கொண்டீர் என்றும், என்னுடைய முலைகளாகிய மலைகளில் வழியும் கண்ணீர் அருவி உமக்குத் திருமாலிருஞ்சோலை மலையின் உச்சியில் இருந்து வழியும் அருவிநீராகத் தோன்றுகின்றதோ என்றும், விலை மதிக்க முடியாத பொன்னாடை ஒன்று மட்டும் இருந்தால் போதாதா? இராமாவதாரத்தில் உடுத்திக் கொண்ட துவராடையின் மீது வெறுப்பு வந்ததோ? நல்ல சேலைகளை முத்து மாலை அணிந்த பாஞ்சாலியின் மார்புகளுக்கு அளித் தமை நினைவில்லையோ (கோபியர்களின் ஆடை களைக் கவர்ந்த) திருட்டுத் தொழிலை மீண்டும் தொடங்கிவிட்டீரோ? (இப்பகுதியில் காம மயக்கத்தால் உடல் மெலிந்த தலைவியின் ஆடை நழுவியதைத் திருமால் திருடினார் என்ற எண்ணத்தில் தலைவி பேசுவதாகும்) கண்ணீராகிய ஈரம் சேர்ந்த எங்களுடைய நூலாடைகள் தான் உமக்குப் பாலாடையாகத் தோன்று கின்றனவோ? (திருமாலுக்குப் பாலாடை விருப்ப முடையது என்பது குறிப்பு) கூறுவீராக. (என்று திருமாலிடம் கேட்டாள். மேலும்)

Koviloor Digital Library

காதல் மயக்கம் கொண்டு உங்களைச் சூழ்ந்து நாங்கள் கூறும் சொற்களைக் கேட்பீராக. திருப்பாற் கடலின் மீது தானே நீங்கள் உறங்குவது? அது போல வையை ஆற்றின் நீரின் மேலும் உறங்குவது உண்டோ? இந்த உலகத்தில் நிலவு ஒளி வெள்ளமாகப் பரவியதோ? அல்லது திருப்பாற்கடல் தான் அங்கு நில்லாது இப்பொழுது உங்களுடன் கூடி வந்து சேர்ந்ததோ? யானையைப் போல இரவு கருமையாய் இருப்பதால் அதனைக் கஜேந்திரன் எனக் கருதி விட்டு விட்டீர்கள். அதுபோல இரவு என்னும் யானையின் மீது ஏறி வருகின்ற விண்மீனாகிய சந்திரனையும் விட்டு விடலாமோ? (இரவுப் பொழுதும் நிலவும் காதல் வயப்பட்ட தலைவியை வாட்டுவதால் இவ்வாறு கூறுகிறாள்)

இசையும் நடனமும் கொண்ட இளம் கோபிகை களுக்கு இரக்கம் காட்டும் தாங்கள், காதல் துயரால் நெஞ்சு நடுங்குகின்ற இளம் பெண்களாகிய எங்களுக்கு இறங்க இயலாதா? பால் கறப்பவர்கள் குனிந்து பாத்திரத்தில் பால் கறப்பதற்கு முன்னே பசுங்கன்றைப் பசுவின் மடியில் அருந்த விட்டுப் பின்னர்தான் கறப் பார்கள் என்பதைக் கூட மறந்துவிட்டீரோ? (வளையலை விட்டு மற்றதைக் கவராமல் வளையலையும் கவர்ந்து விட்டீரே என்பது குறிப்பு) கண்ணனாக அவதரித்த போது கோபியர்களின் அருகில் சென்று பால்துளிகள் சிந்தும் அவர்களின் பெரிய முலைகளைப் பால்குடம் என்று கருதி, அன்புடன் எடுத்து அருந்தியது அறியவில்லையா? மின்னல் போன்ற கோபியர்களின் இதழ்களில் தெறித்த வெண்ணெயை உண்பதுபோல அவர்களின் இதழ்களைச்

Koviloor Digital Library

சுவைத்ததை மறந்து விட்டீரா? முன்பு கோவர்த்தனம் என்ற அழகு பொருந்திய குன்றை எடுத்தீர், குளிர்ச்சி பொருந்திய பாற்கடலைக் கடைந்தீர், காளிங்கப் பாம்பில் நடனம் ஆடினீர் (இவையெல்லாம் செய்த நீங்கள் கலவிக்குரிய முலைக்குன்று எடுத்தல், வாயமுதம் கடைதல், இடையாகிய பாம்பில் ஆடுதல் ஆகிய வற்றைச் செய்யவில்லையே என்று வருந்துவது குறிப்பு) என்று அழகரிடம் தலைவி கூறி வருந்தினாள்.

சொ.பொ.வி:

மரு - வாசனை, என்சங்கு - என்சங்கு வளையல், கலை - ஆடை, சோரம் - குற்றம் (திருட்டுத் தொழில்), மால் - மயக்கம், நித்திரை - உறக்கம், வேகவதி - வையை, கங்குல் - இரவு, வன்மீன் - நிலவு, கானம் - இசை, சதிர் - நடனம், கொட்டம் - பாத்திரம்.

அழகர் சோலைமலை திரும்புதல், தலைவியின் வருத்தம் (185-191 கண்ணிகள்)

-என்றுஎன்று
கொண்ட பஞ்சாயுதன் மேல் கொள்கை பெறத்தேனூர்
மண்டபம் சார்வாய் வலம்கொண்டு - பண்டை
விரசையுடன் வைகுந்த வீடும் இதுஎன்னப்
புரசைமாலை காத்தோன் புகுந்தான் - வரிசை
உபசாரம் கொண்டு அருளி ஓர்சிவிகை மீது
தவசுஆர் அம்சீபதியைச் சார்ந்தான் - இபமுண்ட
வெள்ளிற்கனி ஆனேன் வேதனை ஈன்றவன்தான்
உள்ளில் கனியானே ஊர்ந்துவரும் - பிள்ளைமதி

Koviloor Digital Library

செவ்வை மதியோ திரைக்கடல் வாய் சிறிதோ
கொவ்வை இதழார் மொழிதான் கூற்றுஅன்றோ- எவ்வம் உறும்
கால் தேரினாலும் ஒருகாலனன்றோ உருக்கி
ஊற்றாத சேமணியும் ஒன்று உண்டோ - வேற்றுக்
கிளையோடு வாடிக் கிடந்தாலும் சுட்டுத்
துளையாக் குழலும் உண்டோ சொல்லாய்.

பொருள்:

தலைவி மேற்கூறியவற்றைக் கூறி ஐந்து ஆயுதங் களைக் கொண்ட அழகர் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டி நிற்க, அழகரோ தேனூர் மண்டபம் சார்ந்து அதனை வலமாக வந்து பழங் காலத்தில் விரசை என்ற நதியுடன் இருந்த வைகுந்தம் ஆகிய வீடு இதுதான் என்று கருதி, புரசைக் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் கஜேந்திரன் என்ற யானையைக் காத்த திருமால் அம்மண்டபத்தில் புகுந்தான். அங்கு அவனுக்கு அளிக்கப்பட்ட உபசாரங்களையும் ஏற்றுக் கொண்டு ஒப்பற்ற தன் பல்லக்கில் ஏறித் தவம் பொருந் திய அழகிய ஊரான சோலைமலையை அடைந்தான்.

அவனைக் கண்ட (தலைவியாகிய) நானோ அன்று முதல் யானை உண்ட விளாம்பழம்போல் மெலிந்தேன். பிரமனைப் பெற்ற அந்த அழகன் உள்ளம் கனிய வில்லையே? வானில் ஊர்ந்து வரும் பிறைச் சந்திரன் திருத்தமானதோ? அலைகளை உடைய கடலின் வாய் சிறியதோ? கொவ்வை இதழைக் கொண்ட தோழிமார் கூறும் மொழிதான் எனக்கு எமனன்றோ? எனக்குத் துன்பம் தரும் தென்றல் காற்றாகிய தேரில் வரும் மன்மதனும் எனக்கு ஓர் எமனாவானோ? வெண்கலத்தை

Koviloor Digital Library

உருக்கி ஊற்றாமல் செய்யப் பெற்ற காளையின் கழுத்தில் கட்டப் பெறும் மணிகளும் உண்டோ? பிற மூங்கில் களுடன் கூடிக் கிடந்து காதல் துன்பத்தைப் பற்றி அறிந் தவைதான் என்றாலும் சுட்டுத் துளைக்கப்படாத புல்லாங் குழலும் உண்டோ (என்று கூறி வருந்தினாள்)

சொ.பொ.வி:

பஞ்சாயுதன் - சங்கு, சக்கரம், வாள், வில், கதை என்ற ஐந்து ஆயுதங்களை உடையவன், புரசை - கயறு, சிவிகை - பல்லக்கு, இபம் - யானை, வெள்ளிற்கனி - விளாம்பழம், பிள்ளைநதி - பிறைச்சந்திரன், (பிறைச்சந்திரன் கோணலாய் இருப்பதால் தலைவியை வருத்துகிறது. எனவே, அது செவ்வை என்ற முழுமை பெறவில்லையே என்பது குறிப்பு), திரைக்கடல் - அலை பொருந்திய கடல், (கடல்வாய் சிறிதாக இல்லாமல் பெரிதாக இருந்து ஓலமிட்டுத் தலைவியை வருத்துகிறது என்பது குறிப்பு) கூற்று - எமன், கால்தேர்- தென்றல் காற்றாகிய தேர், சேமணி - மாட்டின் கழுத்தில் கட்டப் பெறுகின்ற மணி (மணிகள் உருக்கித்தான் செய்யப் பெறுகின்றன. உருக்காமல் செய்யப் பெற்றிருந்தால் தலைவியின் மனத்தை உருகாமல் அதாவது ஏக்கம் உறாமல் செய்திருக்கும் என்பது குறிப்பு), குழல் - புல்லாங்குழல்.

தலைவி கிளியிடம் வேண்டுதல்
(192-198 கண்ணிகள்)

- கிளியரசே

என்கூடு பொன்கூடும் இந்த நிறத்தினால்
உன்கூடும் என்கூடும் ஒன்றுகாண் - என்கூட்டில்
மாங்கனி உண்டு வளம்சேர் செழும் கொவ்வைத்
தீங்கனி உண்டு ஆசினி உண்டு - பாங்கில்

Koviloor Digital Library

குழையும் மனம் உண்டு குழம்பிய பால்உண்டு
உழையே தெளிபாலும் உண்டு - விழைவு அறிந்து
ஊட்டுவேன் உன்னை உருப்பசியாய் என்ன நலங்
காட்டுவேன் பட்டாடையால் துடைப்பேன் - கூட்டில்
அரசாய் இருத்தி ஆலத்தி எடுத்துப்
புரைதீர் நறையும் புகைப்பேன் - அருகே
இளவெயிலில் காய்வித்து எடுத்து ஒருகால் முத்தி
வளைபயில் கையின்மேல் வைத்துத் - துளபமணி
ஈசன் திருநாமம் எல்லாம் என்போல் உனக்குப்
பாசம் தொலையப் பயிற்றுவேன்.

பொருள் :

கிளிகளுக்கு எல்லாம் அரசே, என்னுடைய உடம்பு இப்பொழுது பொன் போன்ற பசலை பூத்ததால் உன் உடம்பும், என் உடம்பும் ஒன்றுபோல் தோன்றுகிறது. என் உடம்பில் மாங்கனி (கன்னம்) உள்ளது. வளமை பொருந்திய கொவ்வைக் கனி (இதழ்) இருக்கிறது. பலாப்பழம் (மார்பகம்) இருக்கிறது. என்னிடம் கனிந்த மனமும் உண்டு. மனதில் குழம்பிய பாலும் (பகுதி) உண்டு. தெளிந்த பாலும் (பகுதி) உண்டு. (கனியும் பாலும் இருக்கிறது என்பது குறிப்பு) உன்னுடைய விருப்பம் அறிந்து இவற்றை எல்லாம் ஊட்டுவேன். உருவத்தில் பசுமை நிறம் உடையவளே என்று பாராட்டி உனக்கு நலங்கு நீராட்டுவேன். பின் பட்டாடை கொண்டு உடம்பைத் துடைப்பேன். உன்னுடைய கூட்டில் அரசனாய் அமர்த்தி ஆரத்தி எடுத்து குற்றமற்ற மணப் பொருட்களால் புகை ஊட்டுவேன், உன்னை அருகில் இளவெயிலில் உலர்த்தி எடுத்து ஒருமுறை முத்தமிட்டு

Koviloor Digital Library

வளையல் அணிந்த என் கையில் வைத்து, துளசி மாலை அணிந்த அழகரின் திருப்பெயர்களை எல்லாம் பாசப்பற்று நீங்கும்படி உனக்குப் பேசக்கற்றுக் கொடுப்பேன்.

சொ.பொ.வி:

கூடு - உடம்பு, ஆசினி - பலாப்பழம், உருப்பசி - பசுமை உருவம், (ஊர்வசி என அழைத்து), நறையும் - மணப் பொருட்கள், முத்தி - முத்தமிட்டு.

தூதுக்குப் பிற பொருட்கள் ஏற்புடையன அல்ல.
(199-204 கண்ணிகள்)

- பேசு என்றே
ஈடுபட்ட வெள்ளை எயினத்தைத் தூதுவிட்டால்
சூடுபட்டார் துணிந்து சொல்வாரோ - கூடுகட்டி
அன்பாய் வளர்த்த தாயார்க்கு உதவாக் கோகிலம்தான்
என்பால் அருள்வைத்து இயம்புமோ - தன்பேர்
அரி என்று சொன்னால் அளி என்று சொல்லும்
வரிவண்டு பேசிவருமோ - விரகம் செய்
வன்காலத் திக்கின் மலைவாய் இருக்கின்ற
தென்காலும் என்காதல் செப்புமோ - பொன்காதல்
வண்டலையும் தாரோன் முன் மாதரை எல்லாம் தூற்றும்
கொண்டலையும் தூது விடக் கூடுமோ - உண்ட
படியேழும் காக்கும் பரங்கருணையான் முன்
கொடியோரும் போவாரோ கூறாய்.

பொருள் :

வலிமை அழிந்த வெண்மை நிறம் உடைய அன்னப் பறவையைத் தூது விட்டால் முன்பே சூடுபட்டவர் (சூடு

Koviloor Digital Library

பட்டதால்) துணிந்து சென்று தூது செல்வாரோ? கூடு கட்டித் தன்னை அன்பாய் வளர்த்த அன்னைக்கு உதவி செய்யாமல் தாயைவிட்டுப் பிரிந்து வந்த குயில் என் பால் கருணை கொண்டு எனக்காகத் தூது செல்லுமோ? தன் பெயரை அரி என்று சொல்ல முடியாது அளி என்று சொல்லும் கோடுகளை உடைய உடலினைக் கொண்ட வண்டு அழகரிடம் சென்று தெளிவாகத் தூது சொல்லித் திரும்பி வருமா? எனக்கு விரக வேதனையைத் தருவதும் மற்றும் கொடியவனான எமனுக்குரிய தென்திசையில் இருக்கும் பொதிய மலையில் இருந்து வருவதும் ஆகிய அந்தக் கொடிய தென்றல் என் காதலைத் தலைவரிடம் சொல்லுமோ? திருமகளின் காதலனும் வண்டுகள் மொய்க்கும் மாலையை அணிந்தவனுமாகிய அழகரிடம் பெண்கள் அனைவரையும் பழிதூற்றுகின்ற மேகத்தைத் தூதுவிட முடியுமோ? தான் உண்ட ஏழு உலகங்களையும் காக்கின்ற பெருங்கருணையாளன் முன் கொடியோர் எனப்பட்ட காக்கைகளும் போவார்களோ? கூறுவாயாக.

சொ.பொ.வி:

தலைவி கிளியைத் தவிர வேறு பொருள்களைத் தூதுவிட முடியாது என்று காரணங்களோடு குறிப்பிடுகின்ற பகுதி. எயினம் - அன்னப்பறவை, சூடுபட்டார் - சுடப்பட்டவர் என்றும், உச்சிக் கொண்டையை உடையவர் என்றும் பொருள் கொள்வர். உச்சிக் கொண்டையை உடைய அன்னத்தைக் குறிப்பிடுகின்ற பொழுது சூடுபட்டார் என்று கூறுவதால் முன்பு ஒருமுறை அடிமுடி தேடிய காலத்தில் தோல்வியுற்றமையும் கூறுவதுண்டு. கோகிலம் - குயில், தாயார்க்கு உதவா - குயில் முட்டை பொரிக்கும் காலத்தில் காக்கை கூட்டில் வைக்கப்படும்.

Koviloor Digital Library

காக்கை அம்முட்டையைக் குஞ்சு பொரிக்க வைக்கும். குஞ்சு வெளிவந்தவுடன் இறக்கைகள் முளைத்ததும் குயில் குஞ்சு காக்கையை விட்டுப் பறந்துவிடும். எனவே, பெற்ற தாயரை மறந்த நிகழ்ச்சியால் குயிலைத் தூதுவிட முடியாது என்பது குறிப்பு. வன்காலன் - கொடிய எமன், தென்கால் - தென்றல் காற்று, பொன்காதல் - திருமகளின் காதலன், கொண்டல் - மேகம், படி - உலகம், கொடியோர் - காக்கையின் பெயர் மற்றும் கொடி யோர்கள்.

கிளியே தூது உரைக்கத் தகுதி உடையது (205-209 கண்ணிகள்)

- அடியார்கள்

அங்கிருந்தால் கீர்த்தனம் செய்வாய் அடுத்த நாச்சியார்
பங்கிருந்தால் கையில் பறந்து இருப்பாய் - எங்கு இருந்து
வந்தாய் என்றால் மாலிருஞ்சோலையினில் இருந்து
எந்தாய் உனைத்தொழ வந்தேன் என்பாய் - அந்தச்
சவுந்தரவல்லி என்னும் தற்சொரூபிக்கும்
உவந்து அலர்சூடிக் கொடுத்தாளுக்கும் - சிவந்த
கடுகிலேசம் கோபம் காணாமல் என்மால்
வடுகிலே சொல்வாய் வகையாய் - அடுகிலே
சம்கெடுப்பாய் சங்கெடுக்கும் சச்சிதானந்தர் அணி
பொங்கு எடுக்கும் தாமம் கொடுவருவாய்.

பொருள்:

கிளியே நீ தூது செல்லும் இடத்தில் அடியார்கள் இருந்தால் அவர்களுடன் சேர்ந்து கீர்த்தனம் பாடுவாய். அழகரோடு நாச்சியார் பக்கத்தில் இருந்தால் அவர் கையில் அமர்ந்து கொள்வாய். எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டால் திருமாலிருஞ்சோலையிலிருந்து என்

Koviloor Digital Library

தந்தையே உன்னைத் தொழ வந்தேன் என்பாய். அங்கிருக்கும் செளந்தரவல்லித் தாயாருக்கும் மகிழ்ந்து மலர் மாலை சூடிக் கொடுத்த ஆண்டாளுக்கும் முகம் சிவக்கக் கடுகளவும் கோபம் வராமல் என் காதல் மயக்கம் பற்றித் தெலுங்கு மொழியில் வகைப்படுத்திச் சொல் வாய். என்னுடைய துன்பத்தை அழிக்கும் வண்ணம் சங்கினைக் கையில் தாங்கியிருப்பவரும், சச்சிதானந்த வடிவானவரும் ஆகிய அழகரின் தேன் வழியும் மலர் மாலையை வாங்கிக் கொண்டு வருவாயாக.

சொ.பொ.வி:

பங்கு - பக்கத்தில், தச்சுரூபி - பெயருக்கு ஏற்ற வடிவம் கொண்ட நாச்சியார், உவந்து - விரும்பி, அலர் - மாலை, கடுகிலேசம் - கடுகின் அளவு, வடுகு - தெலுங்கு, அடுகிலேசம் - துயரம், சச்சிதானந்தர் - (சத் - சித்து - ஆனந்தர்) உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றின் வடிவம், பொங்கு - தேன், தாமம் - மாலை.

அழகர் இருக்கும் இடம் (210-213 கண்ணிகள்)

- அங்கு அடுக்கின்
ஓர் உகத்தில் ஆலாகி ஒருகத்திலே அரசாய்
ஓர் உகத்திலே வில்லுவம் ஆகி - ஒருகத்தில்
புத்திர தீபமும் ஆய் புங்கவர்க்கு ஆறாம் தருவாய்ச்
சக்தி தரும் ஓர்தரு உண்டு - மொய்த்த
ஒருகோடிக் காஉண்டு ஒருகோடி ஆறுண்டு
ஒருகோடிப் பூஞ்சுனையும் உண்டு - திருமால்
அறங்காக்கும் யோகியர் போல் அல்லும் பகலும்
உறங்காப்புளி தானும் உண்டு.

Koviloor Digital Library

பொருள் :

(கிளியே அழகரிடம் செல்ல அடையாளம் கூறு கின்றேன் என்று தலைவி கூறத் தொடங்குகின்றாள்) வரிசையாகச் சொன்னால் கிரேதாயுகத்தில் ஆலமர மாகவும், திரேதாயுகத்தில் அரசமரமாகவும், துவாபர யுகத்தில் வில்வமரமாகவும், கலியுகத்தில் புத்திரதீபம் என்னும் மரமாகவும் தோன்றி, புங்கவராம் தேவர்க்கு ஐந்து கற்பக மரங்களுக்குப் பின் ஆறாவது கற்பக மரமாகி வந்து தெய்வத்தின் சக்தியைத் தந்து கொண்டிருக்கின்ற ஒரு மரமுண்டு. அங்கு ஒரு கோடிக்கணக்கான சோலை கள் நெருக்கமாக உள்ளன. கோடிக்கணக்கான ஆறுகளும் சுனைகளும் உள்ளன. மேலும் திருமாலுக்குரிய வைணவ அறத்தைக் காக்கும் யோகியர்களைப் போல இரவில் பகலில் உறங்காத புளியமரம் ஒன்றும் அங்கு உண்டு.

அழகரின் திருச்சபையில் இருப்பவர்
(214-229 கண்ணிகள்)

- திறம்சேர்
பிதாமகனோடு உறையும் பெற்றி விளங்கப்
பிதாமகன் வந்து புகழ் பேசச் - சதா கால
முந்திரமாய் வாழும் உபேந்திரன் அங்கில்லைஎன
இந்திரனார் வந்து அங்கு இனிது இறைஞ்சப் - பிந்திய
தம்பியர் மூவருக்கும் தானே அரசு ஈந்த
நம்பி திருத்தாளை நம்பினோர் - வெம்பிறவித்
தேகம் பவித்திரம் செய்சீரங்கராச பட்டர்
ஆகும் ப்ரசித்தராம் அர்ச்சகரும் - மோகம்உறும்
கங்குல் மலமாயை கன்மம் விளங்காமல்

Koviloor Digital Library

செங்கையில் ஓங்கு திரிதண்டு ஏந்திச் - சங்கை அறச்
செய்யும் திருமாலிருஞ்சோலைச் சீயர் என
வையம் விளங்கவரு மாதவரும் - பொய்யில்லா
ஞானதீபம் காட்டி நன்னெறி காட்டு என்று ஒருப
மான தீபம்காட்டி வந்துநின்று - மேல்நாளில்
முத்தமிழ்க்குப்பின்போவார் முன்போகப் பின்போன
அத்தன் திருமலை ஆண்டானும் - பக்தியினால்
வையம் கார்வண்ணனையே வாழ்த்த வரும் தோழப்ப
ஐயங்கார் என்னும் ஆசாரியரும் - மெய் அன்பாம்
சிட்டர்கள் தேவர்களாகத் தினம் பரவும்
பட்டர்களாம் வேதபாரகரும் - விட்டு எனும்
சோதி கருணைக்கடல் தோன்றிக் கரசரண்
ஆதியுடன் வந்த அமுதாரும் - மூதுலகில்
தண்அம் துழாய் அழகன் தங்கும் திருமலைபோல்
நண்ணும் திருமலை நம்பிகளும் - உள்நின்ற
மாலை மலை சோலைமலையையே நம்புதலால்
சோலைமலை நம்பி என்னும் தூயோரும் - மேலை
விரிஞ்சன் முதலோர்க்கும் விட்டுப் பிரசாதம்
தரும் சடகோபநம்பி தாமும் - பெருஞ்சீர்
வரிஎழுதிக் கற்ற திருமாலிருஞ்சோலைப்
பிரியர் எனும் சீகருணைப் பேரும் - கிரியில் இருந்து
ஆளும் கடவுள் அருளே துணையாய் எந்
நாளும் சீகாரியம் செய் நாயகரும்.

பொருள்:

திறமை மிக்க தன் தந்தையுடன் மகன் உடனிருக்கும் தன்மை போலப் பிரமனும் (அழகர் இருக்கும் சபையில்) அங்கு வந்து இருந்து அழகரின் புகழைப் பேசவும், சதா காலமும் நிலைத்து வாழும் திருமால் இப்பொழுது தேவர் உலகில் இல்லை என இந்திரன் அங்கு வந்து

Koviloor Digital Library

இனிமையுடன் வணங்கவும், பின் பிறந்த தம்பியர் மூவருக்கும் தானே அரசு கொடுத்த அழகரின் திருப்பாதங் களை நம்பினோராகிய, கொடிய பிறவியில் எடுத்த தம் உடலைத் தூய்மையாகக் கொண்டு இறைவனை வணங்கும் ஸ்ரீரங்கராச பட்டர் என்னும் புகழ்பெற்ற அர்ச்சகரும், மயக்கமுற்ற இருளைப் போன்ற ஆணவ மலம், மாயை, கன்மம் ஆகியவற்றை நீக்கவதற்கு சிவந்த கையில் உயர்ந்த திரிதண்டத்தை ஏந்தி ஐயத்தை நீங்கச் செய்யும் திருமாலிருஞ்சோலைச் சீயர் என உலகில் புகழ் விளங்க இருக்கும் பெருந்தவ முனிவரும், பொய்மை இல்லாமல் செய்யும் ஞான விளக்கைக் காட்டி நல் வழியைக் கூறுவதற்கு ஒப்பாகத் திருவிளக்கைக் காட்டி வந்து நின்று, முன் ஒரு காலத்தில் முத்தமிழ் பாடலைக் கேட்டு அதன்படியே பின் சென்றவராகிய பெருமாள் முன்னே போக, அவர் பின் சென்ற திருமலை ஆண்டானும், அன்பினால் இவ்வுலகில் மேகம் போன்ற கருமை நிறமுடைய திருமாலையே துதித்துக் கொண் டிருக்கும் தோழப்பையங்கார் என்ற ஆசாரியரும், உண்மை அன்பு கொண்ட அடியார்களைத் தேவர் களாகவே கருதி நாள்தோறும் போற்றுகின்ற பட்டர்களாம் வேத பாரகரும், திருமாலாகிய ஒளியின் கருணைக் கடலில் தோன்றி கைகால்களுடன் வந்த அமுதர் என்பவரும், பழமையான உலகத்தில் துளசிமாலை அணிந்த அழகர் தங்கும் திருமலை போல எண்ணி இம்மலையில் தங்கிய திருமலை நம்பி என்பவரும், மனத்தின் உள்ளே இருக்கும் அறியாமையாம் மயக் கத்தைக் கெடுக்கின்ற சோலைமலையை நம்பி வாழ்கின்ற சோலைமலைநம்பி என்ற தூயவரும்,

Koviloor Digital Library

அனைவருக்கும் மேலான பிரமன் முதலான தேவர்களுக்கும் திருமாலின் பிரசாதத்தைத் தருகின்ற சடகோப நம்பி என்பவரும், பெருஞ்சிறப்பினை உடைய அனைத்து வகைக் கணக்குகளையும் எழுதக் கற்ற திருமாலிருஞ்சோலைப் பிரியர் என்ற கணக்கரும், இம்மலையில் இருந்து உலகை ஆளும் கடவுளின் அருளே துணை எனக் கொண்டு என்றும் கோயில் திருப்பணி செய்கின்ற நாயகரும்,

சொ.பொ.வி:

பிதா - தந்தை, பிதாமகன் - பிரமன், சதாகால முந்திரமாய் (சதாகாலமும் ஸ்திரமாய்) - எல்லாக் காலங்களிலும் நிலைத்து, உபேந்திரன் - திருமால், தம்பியர் மூவர் - பரதன், சுக்ரீவன், வீடணன், அரசு ஈந்த - அம்மூவர்க்கும் முறையே அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை என்ற மூன்று அரசம் கொடுத்து, தேகம் - உடம்பு, பவித்திரம் - தூய்மை, பிரசித்தராம் - பெருமை பெற்றவராம், மோகம் - மயக்கம், கங்குல் - இரவு, பின்போவார் முன் போக - கணிகண்ணனுக்காகத் திருமழிசையாழ்வார் பாடிய முத்தமிழுக்காகப் பின் சென்ற திருமால், சிட்டர்கள் - அடியார்கள், விட்டு - விஷ்ணு, கரசரண் - கையும்காலும், மாலை - அறியாமை, விரிஞ்சன் - பிரமன், கிரி - மலை, சீகாரியம் - கோயில் திருப்பணி.

கிளி செய்ய வேண்டுவன (230-249 கண்ணிகள்)

- தாள் வணங்க

ஆர்த்த திருவோலக்கமாய் இருப்பன் அப்பொழுதுன்
வார்த்தை திருச்செவியில் வாயாது - சேர்த்தியிலே
மெல்ல எழுந்தருளும் வேளை பார்த்து அவ்வேளை

Koviloor Digital Library

சொல்ல எழுந்து ஒருவர் சொல்லாமுன் - வெல்லுமதன்
அம்பலர் தூற்ற அடர்ந்து வருமுன்னே
வம்பலர் தூற்ற வருமுன்னே - கும்பமுனி
வாயில் நுரையடங்க வந்த கடலடங்கத்
தாயின் உரையடங்கத் தத்தையே - நீஉரையாய்
உன்பேர் சுவாகதம் என்று ஓதுகையால் உனக்கும்
அன்புஏர் சுவாகதம் உண்டாகும் காண் - முன்பொருநாள்
கோசலை கையிற் குரிசில் உனைப் புகழ்ந்து
பேசின் உனைப் புகழ்ந்து பேசாரார் - நேசமுடன்
எம்முடைய மாலை இருபுயத்து மாலைகேள்
உம்முடைய மாலை உதவீரேல் - அம்மைதிரு
கோதையார் சூடிக்கொடுத்து வரவிட்ட
தாதையார் மாலைதனைத் தம்மின் என்பாய் - நீதி
அடுப்பவர் யாவர்க்கும் ஆடித்தியாகம்
கொடுப்பவன் இல்லை என்று கூறான் - தடுக்கும்
அருமாலை நீக்கும் அழகன் புயத்து
மருமாலை நீ வாங்கி வா.

பொருள் :

(முன் குறிப்பிட்ட பெருமக்கள் அனைவரும்) பிரியமுடன் வணங்க, ஆரவாரம் நிறைந்த அவையில் திருமால் அமர்ந்திருப்பார். அப்பொழுது நீ தூது உரைத்தால் அது அழகரின் திருச்செவியில் ஏறாது. அவர் பள்ளியறைக்கச் செல்லும் நேரம் பார்த்து அப்பொழுது வேறு ஒருவர் தம் செய்தியைச் சொல்வதற்கு முன், (நீ சொல்ல வேண்டும்). மேலும் எல்லோரையும் வென்ற மன்மதன் மலர் அம்புகளை என் மேல் செலுத்திப் போர்புரிய வருவதற்கு முன்னும், அயலார் என் காதலைப் பற்றி அலர்தூற்றுவதற்கு முன்னும், குடத்தில்

Koviloor Digital Library

பிறந்த அகத்தியரின் வாயில் முன்றுரையாக அடங்கிய கடலின் ஒலி அடங்கவும், என் செவிலித்தாயின் சொற்கள் அடங்குமாறும் என் காதலை அழகரிடம் உரைப்பாயாக.

உனக்குச் சுவாகதம் என்று ஒரு பெயர் இருப்பதால் அவரிடம் அன்பு நிறைந்த சுவாகதம் என்ற நல்வரவு கிடைக்கும். காண்பாயாக. முன் ஒரு காலத்தில் கோசலையிடம் வளர்ந்த தலைவனாம் இராமனே உன்னைப் புகழ்ந்து பேசினான் என்றால் யார்தான் உன்னைப் புகழ மாட்டார்கள்? ஆதலால் எமக்குத் தலைவராகிய திருமாலை நோக்கி அவர் தன் இரு தோள்களிலும் அணிந்திருக்கும் மாலையைக் கேள். பிறகு அவரிடம் உங்களுக்கே உரிய பூமாலையைத் தரவில்லை என்றாலும் எம் அன்னையாகிய ஆண்டாள் சூடி அழகு பார்த்தபின் உம்மிடம் வரச் செய்த பூந்தாது நிறைந்த மாலையையாவது தாருங்கள் என்று கூறுவாயாக.

நீண்ட காலமாகத் தன்னை அண்டி வந்து வழி படுவோர் யாவருக்கும் ஆடித் திருவிழாவின் போது வேண்டும் வரங்கள் தருகின்ற அழகன் - இல்லை என்று கூறமாட்டான். ஆதலால் ஒருவராலும் தடுத்தற்கரிய மயக்கத்தை நீக்கும் அழகனின் தோளில் அணிந்திருக்கும் மணம் நிறைந்த மலர் மாலையை வாங்கி வா.

சொ.பொ.வி:

திருவோலக்கம் - அழகர் இருக்கும் சபை, வாயாது - ஏறாது, அம்புஅலர் - மலரம்புகள், வம்பலர் - பழி, கும்பமுனி - குடத்தில் பிறந்த அகத்தியர், தாயின்உரை - செவிலித் தாயரின்

Koviloor Digital Library

சொற்கள், சுவாகதம் - கிளி என்ற பொருளும் நல்வரவு என்ற பொருளும் தரும். குரிசில் - தலைவன். திருக்கோதையார் - ஆண்டாள் நாச்சியார், ஆடித்தியாகம் - ஆடித்திருவிழாவில் வழங்கும் வரம், அருமாலை - மயக்கம், மரு - மணம்.

புராண வரலாறு :

233வது கண்ணி - இந்திரன் தன் பகைவனான விருத்திராசுரனுடன் போர்புரிந்த பொழுது பகைவன் கடலின் உள்ளே மறைந்துவிட்டான். அவனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத இந்திரன் அகத்தியரிடம் உதவி வேண்டினான். அகத்தியர் கடல்நீர் முழுவதையும் தன் உள்ளங்கையில் வரச்செய்து கடுகளவாக ஆக்கி உண்டார். எனவே, கடல்நீர் அவரின் வாயருகே நுரையாக வந்தது என்பது குறிப்பு. கடலில் மறைந்திருந்த அரக்கனை இந்திரன் எளிதாக வென்றான்.

235வது கண்ணி - சீதை தான் வளர்த்த கிளிக்கு ஒரு பெயர் கூறுக என்று இராமனிடம் கேட்ட பொழுது, கிளியைத் தன் தாயாக நினைந்து அன்னையின் பெயராகிய கைகேயி என்று பெயர் வை என்றான். எனவே, இங்கு கிளியை இராமன் புகழ்ந்து பேசினான் என்பது குறிப்பு.

ஓம் நமோ நாரயணாய நம

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 45843

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருமாலிருஞ் சோலை மலையில் கோயில்
கொண்ட அழகரிடம் உள்ளத்தைப்
பறிகொடுத்த பெண்ணொருத்தி தன்
காதலை அவரிடம் தெரிவித்து அவர் தன்
காதலை ஏற்றதன் அடையாளமாக
மாலை ஒன்றை வாங்கி வருமாறு
கிளியைத் தூது விடுப்பதாகப் பாடப்பெற்ற
நூல் அழகர் கிள்ளை விடு தூது.
இது 239 கண்ணிகளைக்கொண்டது.

